USAID
FROM THE AMERICAN PEOPLE

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# உள்ளூராட்சி அதிகார சபை அதிகாரிகளின் கொள்முதல் செயல்முறையின் ஊழல் அபாயங்கள் மீதான பகுப்பாய்வு

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) அமைப்பானது சுயேட்சையானதும் இலாப நோக்கமற்றதும் பக்கச்சார்பற்றதுமான அரசசார்பற்ற நிறுவனமாகும். ,இலங்கையில் அரசாங்கம், அரசியல், வர்த்தகம், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சகல பிரஜைகளினதும் அன்றாட வாழ்க்கை ஊழல் அற்றதாக உருவாக்குவதற்கான தூரநோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இவ் அமைப்பானது பேர்லினை அடிப்படையாகக் கொண்ட ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெ'னல் அமைப்பின் இலங்கையில் முழுமையாக தேசிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஒரு அமைப்பாக விளங்குகிறது.**

**www.tisrilanka.org**

வடிவமைப்பு - ஹரித்த தஹநாயக்க

இவ் அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் அனைத்தும் துல்லியமாக சரிபாக்கப்பட்டுள்ளதுடன் இதிலடங்கியுள்ள அனைத்த தகவல்களும் நவம்பர் 2019 வரை சரியானவை என நம்பப்படுன்றது. எவ்வாறாயினும் இவ்வறிக்கையிலுள்ள தகவல்களை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகளை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஒருபோதும் பொறுப்பேற்காது என்பதனையும் திட்டவட்டமாக அறியத்தருகின்றது.

ISBN: 978-955-1281-94-6

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல்
ஸ்ரீலங்கா 5/1 எலி பேங்க் வீதி,
கொழும்பு,
இலங்கை.

தொலைபேசி இல : +94 0114369781
தொலைநகல் : +94 011 2 501 707

tisl@tisrilanka.org
www.tisrilanka.org

facebook.com/tisrilanka
twitter.com/tisrilanka

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| பொழிப்பு அறிக்கை | 01 |
| 1. அறிமுகம் | 05 |
| 2. கருத்திட்டத்தின் திட்டம் | 13 |
| 3. கருத்திட்டக் கண்டுபிடிப்புக்கள் | 15 |
| 4. வழங்குநர்களைப் பதிவு செய்யும் முறையியல் | 20 |
| 5. விலைமனுக் கோரல் மற்றும் சமர்ப்பித்தல | 23 |
| 6. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் | 25 |
| 7. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு | 28 |
| 8. கணக்காய்வுச் செயன்முறை | 30 |
| 9. தகவல் அறியும் சட்டத்திற்கு அமைய தகவல்களை சமர்ப்பிக்கின்ற போக்கு | 33 |
| 10. ஆராய்ச்சிக் கற்கையின் கற்றல்கள் | 35 |
| 11. முடிவுகள் மற்றும் சிபாரிசுகள் | 36 |

# I. பொழிப்பு அறிக்கை

## I.I பின்னணி

இது இலங்கை நிருவாகக் கட்டமைப்பில் இயங்கிவருகின்ற மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகிய நிறுவனங்களின் பெறுகை முறையியல் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கற்கையாகும். அரச நிறுவனம் என்ற வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் நகர மற்றும் கிராமிய ரீதியாக மக்களின் சேவையை வலுவூட்டும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டிருப்பதுடன், குறிப்பாக சமூக நலன்புரி, வீதி அபிவிருத்தி மற்றும் பொதுச் சேவைகளை அமுல்படுத்தி தேசிய மட்டத்தின் அரச கொள்கைகளை கிராமிய மட்டத்தில் அமுல்படுத்துவது உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான பிரதான பொறுப்பாகும். அரசியல் அதிகார அமைப்பின் கிராமிய பிரதிநிதித்துவம் மற்றும் அரசின் சிவில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களையும் உள்ளடக்கிய நிருவாகக் கட்டமைப்பினால் நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் வருமானத்தை அரசின் செலவினக் கொள்கைகளுக்கு அமைய அமுல்படுத்த அரச நிறுவனங்கள் என்ற வகையில் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் கட்டுப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களின் செலவினப் பிரவேசமொன்றாக பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வது முக்கியமானதாகும் என்பதுடன் மேற்படி செலவினமும் பெறுகைக் கோட்பாடு மற்றும் நன்னெறிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வது அத்தியாவசியமாகும். எனினும் சில சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி மன்றம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் இந்த நியமக் கொள்கைகளை பின்பற்றுவதில்லை என்றும் இதனால் ஊழல் அபாயம் நிறுவன ரீதியாக காணப்படுவதாகவும் கற்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.[1] எனவே இந்தக் கற்கையின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் பெறுகை முறையியல் இதன் போது ஆராயப்படுகின்றது. இந்த ஆராய்ச்சிக் கற்கையானது பின்வரும் அம்சங்களில் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

அரச நிறுவனங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள பெறுகை முறையியலின் அடிப்படை படிமுறைகளான வழங்குநர்களை பதிவு செய்தல், விலைமனுக் கோரும் நடைமுறை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் செயற்பாடு, பெறுகையில் தாக்கம் செலுத்தும் கணக்காய்வு செயன்முறை மற்றும் பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்யும் போது வழிகாட்டல்களை நடைமுறையில் பின்பற்றுவது தொடர்பாக இதன் போது ஆராயப்பட்டது. மேலும் பெறுகையின் போது ஊழலுக்கு உள்ள வாய்ப்புக்கள் மற்றும் அதன் அபாயம், அதற்கான பிரவேகங்கள் பற்றியும் ஆராயப்பட்டது. 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தகவல்களைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதுடன் அரச நிறுவனம் என்ற வகையில் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் தகவல்களைச் சமர்ப்பிப்பது தொடர்பாக பதிலளிக்கும் போக்கு பற்றியும் கற்கையின் போது கவனம் செலுத்தப்பட்டது.

## I.II ஆராய்ச்சிக் கற்கையின் நோக்கங்கள்

1. உள்ளூராட்சி மன்றங்களின் பெறுகை செயன்முறை பற்றிய தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அத்தரவுகளை ஒப்பீட்டு ரீதியாக பகுப்பாய்வு செய்தல்.
2. உள்ளூராட்சி மன்றத்தினால் அமுலில் உள்ள பெறுகை முறையியல்கள் எவ்வளவு தூரத்திற்கு பின்பற்றப்படுகின்ற என்பது பற்றி ஆராய்தல்.
3. உள்ளூராட்சி மன்றத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற முறையியல்கள் மற்றும் நியம முறையியல்களுக்கு இடையிலான இடைவெளியை இனங்காணல்.
4. பெறுகை முறையியல் இடம்பெறுகின்ற மோசடி மற்றும் ஊழல் நிலைமைகள் பற்றிய ஆய்வுக் கற்கை
5. உள்ளூராட்சி மன்றங்களின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய அறிவு தொடர்பிலான ஆய்வுக் கற்கை
6. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ளல்.

## I.III கற்கை முறையியல்

பிரதானமாக உள்ளூராட்சி மன்றங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் முறையியல் கற்கைத் துறையாக இனங்காணப்பட்டதுடன், இதன் முக்கிய கட்டங்களை உள்ளடக்கியதாக 42 கேள்விகளைக் கொண்ட கேள்விக் கொத்தின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதன் போது வழங்குனர்களை பதிவு செய்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமனம் செய்தல் மற்றும் அதன் செயற்பாடு, விலைமனுக் கோரல், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வுகள் தொடர்பில் மற்றும் தகவல் அறியும் சட்டம் தொடர்பிலான தகவல்

1. Miralis N.G (2018),Corruption Risks in NSW Government Procument; https://www.lexology.com/library/detail.aspx?g=5fde6ac7-70e7-42f6-a0b4-278e26e34cc2, Ramesh, R, Ijhas, M.M, and Dickwella, R (2013). Accountability, Transparency and Corruption in Decentralized Governance: A case of Local Government in Sri Lanka. Proceedings of the Third International Symposium, SEUSL: 6-7 July 2013, Oluvil, Sri Lanka

அலுவலரை நியமனம் செய்வது பற்றியும் தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் சிலவற்றைக் கொள்வனவு செய்யும் போது பின்பற்றப்பட்ட செயன்முறை பற்றியுமான தகவல்கள் தொடர்பிலான கேள்விகள் இந்த வினாக் கொத்தில் உள்ளடங்கியிருந்தன. உள்ளூராட்சி மன்றத்தினால் வழங்கப்படுகின்ற தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கான தகவல்கள் பற்றி சான்றுப்படுத்தப்பட்ட எழுத்துமூலமான பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த ஆராய்ச்சிக் கற்கைக்கு ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கும் வகையில் மாநரக சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்து 75 உள்ளூராட்சி மன்றங்கள் மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதுடன், சுமார் 35 நிறுவனங்கள் மாத்திரம் குறித்த காலப்பகுதிக்குள் பதிலளித்திருந்தன.


தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. இந்தக் கற்கையின் போது 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான தகவல்கள் மாத்திரம் ஆராயப்பட்டதுடன் தரமான கற்கை முறையியல் ஊடாக தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

## I.IV கற்கையின் பெறுபேறு

இந்தக் கற்கையின் போது 75 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வினாக்கொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும்35 நிறுவனங்கள் மாத்திரமே அதற்கான பதிலை அனுப்பியுள்ளன. பதிலளித்த நிறுவனங்கள் வழங்கிய தகவல்களை பகுப்பாய்வு செய்த போது பின்வரும் நிலைமைகள் அவதானிப்புச் செய்யப்பட்டன.

1. 2017 ஆம் ஆண்டு தொடர்பில் 20 உள்ளூராட்சி மன்றங்களும், 2018 தொடர்பில் 26 மன்றங்களும் 2019 ஆம் ஆண்டு தொடர்பில் 27 மன்றங்களுக்கும் பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்ட பின்னர் வழங்குநர்களை பதிவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பின்வருமாறு சமர்ப்பிக்க முடியும்.

**வழங்குநர்களை பதிவு செய்துள்ள உள்ளூராட்சி மன்றங்கள்**




**மூலம்: கற்கையின் தகவல்கள்**

2. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமனம் செய்வது தொடர்பில் 33 நிறுவனங்களினால் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி தகவல்களுக்கு அமைய ஒருசில உள்ளூராட்சி மன்றங்களினால் வருடாந்தம் தொழில்நுட்பக் குழுக்களைத் தாபித்தலும், ஒரு சில நிறுவனங்களினால் அவசியத்தன்மையின் அடிப்படையில் தொழில்நுட்பக் குழுக்களைத் தாபிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்தல் மற்றும் அதன் ஒழுங்கமைப்பு தொடர்பில் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் பின்பற்றப்படுவதும் அவதானிப்புச் செய்யப்பட்டது.


3. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விடைகளுக்கு அமைய விலைமனுக் கோரல் தொடர்பிலான சகல கேள்விகளுக்கும் பதில் அளித்திருப்பது 25 மன்றங்கள் மாத்திரமாகும். 10 மன்றங்கள் இது தொடர்பிலான தகவல்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை. பதிலளித்துள்ள 25 மன்றங்களில் எழுத்துமூலமான ஆவணங்களுடன் இலக்குத் தகவல்களை சமர்ப்பித்திருப்பது 9 நிறுவனங்கள் மாத்திரமாகும். எழுத்து மூலமான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய இந்த நிறுவனங்கள் சரியாக பெறுகை விதிகளைப் பின்பற்றியுள்ள போதிலும் ஏனைய நிறுவனங்களின் முறையியல்கள் பற்றிய முறையான ஆய்வை மேற்கொள்ள முடியாது. எவ்வாறாயினும் விலை மனுக்கோரல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலான வகைப்படுத்தல்களுடன் விலைகளை ஒப்பிடுவதற்கு வாய்ப்பில்லாமை ஊழலுக்கு வழிவகுக்கும்.

4. கற்கை ஆண்டினுள் கொள்வனவு செய்த பொருட்கள் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வு தொடர்பில் பதிலளித்திருப்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான நிறுவனங்களாகும் என்பதுடன் தகவல்களை சரியாக சமர்ப்பிக்காமை காரணமாக இந்த மன்றங்கள் பெறுகை முறையியலை எந்தளவுக்கு பின்பற்றியுள்ளன என்பதை தீர்மானிக்க முடியாதுள்ளது. எனவே ஊழல் செலவினம் பற்றியும் ஆராய முடியாது. எனினும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய மேற்படி நிறுவனங்களினால் ஆகக் குறைந்த விலையை அடிப்படையாகக் கொண்டு மற்றும் கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றி குறித்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்ய முடியும்.

5. 2017 ஆம் ஆண்டில் 13 நிறுவனங்களும், 2018 இல் 10 நிறுவனங்களும், 2019 இல் 01 நிறுவனமும் தமது கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன. எனினும் இந்த அறிக்கைகள் கூட ஒவ்வொரு மாதத்திற்கும் ஏற்புடையதான அறிக்கைகள்

சமர்ப்பித்திருக்காத சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளில் பெறுகை முறையியல் தொடர்பிலான கணக்காய்வு பற்றிய தகவல்கள் உள்ளடங்காமை விசேட அம்சமொன்றாகும்.

உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்




**மூலம்: கற்கையின் தகவல்கள்**

6. 24 உள்ளூராட்சி மன்றங்களினால் உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் அல்லது ஒரு பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அலுவலருக்கு கடமைப் பட்டியல் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் சமர்ப்பிக்கப்படாதுள்ளமை விசேட அம்சமாகும்.

7. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் அல்லது தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 17 கணக்காய்வு அறிக்கைகளும், 2018 ஆம் ஆண்டு தொடர்பிலான 9 கணக்காய்வு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த கணக்காய்வு அறிக்கைகளுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்கள் சில சந்தர்ப்பங்களில் பெறுகை முறையியலை பின்பற்றுவதில்லை என வினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலான கணக்காய்வு வினாக்கள் பெறுகை செயன்முறை தொடர்பில் கூடுதல் கவனத்தை செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது. பெறுகைத் திட்டமொன்று இல்லாமை பொதுவான கணக்காய்வு வினாவொன்றாக இருப்பதுடன், ஒரு சில நிறுவனங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது தாமதக் கட்டணங்களை அறவிடாமை காரணமாக இடம்பெறுகின்ற நிதிசார் நட்டம் மற்றும் செலவினம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பெறுகை வழிகாட்டலுக்கு அமைய தொழில்சார் தரப்பினர்களுக்கு பயன்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதாக குறிப்பிட முடியும் என்பதுடன் அவ்வாறான நிலைமைகள் ஊழலுக்கு சந்தர்ப்பதை ஏற்படுத்திக் கொடுக்கும்.

8. பெறுகை முறையியல் தொடர்பிலான ஒட்டுமொத்த தகவல்களையும் மீளாய்வு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பூரணமற்ற மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய நிறுவனங்களினால் தமது செயற்பாட்டின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கு பெரும்பாலான நிறுவனங்கள் வகைப்பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்வதில்லை என்பதைக் குறிப்பிட முடியும்.

9. தகவல் அறியும் சட்டத்திற்கு அமைய நியமனம் செய்யப்பட்ட தகவல் அலுவலர்களின் பெயர்களை 29 நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ள போதிலும், குறித்த நிறுவனங்கள்கூட தமது பொறுப்புக்களின் வரையறைக்குள் சகல வினாக்கள் தொடர்பிலும் தரமான மற்றும் போதியளவிலான தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

10. பொதுவாக தகவல் அறியும் சட்டத்திற்கு பதிலளிப்பது குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என்று குறிப்பிட முடியும்.

## I.V முடிவுகளும், சிபாரிசுகளும்

இக் கற்கைக்கு தெரிவுசெய்யப்பட்ட 75 உள்ளூராட்சி மன்றங்களிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் செயல்முறை குறித்த தகவல் கோரலுக்க 35 நிறுவனங்கள் மட்டுமே தகவல்களை' சமர்ப்பித்தன. அநேகமான உள்ளூராட்சி மன்றங்கள் கோரப்பட்ட தகவல்களை வழங்கியிருந்தாலும், அந்தத் தகவலை ஒப்பிடும் போது,இந் நிறுவனங்களில் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் அடிப்படையான வழிமுறைகளின் ஒப்பீட்டு பகுப்பாய்வை வழங்க அந்தத் தகவல் போதுமானதாக இல்லை. தரவு வழங்குவதில் வெளிப்படைத்தன்மையை பேன முயற்சிக்காத நிறுவனங்களின் இசைவுத்தன்மை அல்லது இடைவெளி தொடர்பாக சிக்கல்கள் இருக்கலாம்.
மேலதிகமாக, இந்த ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் அடையாளம் காணப்பட்ட ஊழல் அபாயங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். உள்ளூராட்சி மன்றங்களின் கொள்முதல் அமைப்பில் கிடைக்கும் ஆய்வுத் தரவு மற்றும் தகவல்களின்படி, அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றாத நிறுவனங்களில் ஊழல் ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும், ஏலம் இடும் செயல்முறையின் மூலம் விலை ஒப்பீடு, வெளிப்படைத்தன்மை பேனா முடிதல் மற்றும் தரமான பொருட்கள் அல்லது சேவைகளின் கிடைக்கும் தன்மை போன்ற பல நன்மைகளை நிறுவனங்கள் பெற முடியும். மேலும், அங்கீகரிக்கப்பட்ட ஏல செயல்பாட்டில் ஈடுபடும் தரப்பினருக்கு ஏமாற்று மற்றும் மோசடி நடத்தைகளில் ஈடுபட வாய்ப்புக்கள் இல்லாததுடன், பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதில் தனிநபரின் விருப்பங்களின் அடிப்படையில் செயல்பட்டால், அது ஊழல் நடைமுறைகளுக்கு வழிவகுக்கும். எனவே, தகவல்களை சமர்ப்பிக்காத நிறுவனங்களில் ஊழல் ஏற்படும் அபாயம் உள்ளது என்பதை வலியுறுத்துவது அவசியமாகிறது. எவ்வாறாயினும், இக் கற்கையின் மூலம்

உள்ளூராட்சி மன்றங்களில் நடைமுறையில் உள்ள பெறுகை முறை மற்றும் அதன் போது மோசடி மற்றும் ஊழல் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புகள் பற்றி மென்மேலும் உணர்வுப்பூர்வமான உபாயமுறையொன்றின் ஊடாக ஆராய்ச்சிக் கற்கையொன்றை மேற்கொள்வது உகந்தது என்று முடிவு செய்ய முடியும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு பெரும்பான்மையான நிறுவனங்கள் சாதகமாக பதிலளித்துள்ளன. தகவல் அதிகாரி ஒருவரை நியமிப்பதன் மூலம் முதல் கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், குறித்த சட்டம் பற்றிய ஆரவல் அல்லது பொறுப்புக்கூறல் போன்றவற்றிற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. தகவல் கோரப்பட்ட நிருவனங்களுக்கிடையிளும், மிக சிறிய அளவிலான நிறுவனங்கள் மட்டுமே தரமான மற்றும் போதிய அளவிலான தகவல்களுடன் பதிலளித்தனர். ஏனைய நிறுவனங்கள் தகவல் கோரும் விண்ணப்பங்களுக்கு பதிலளிப்பது மிகக் குறைவு

தரவுகள் மற்றும் தகவல்கள் கற்கையின் போது அவதானிப்புச் செய்யப்பட்ட நிலைமைகள் தொடர்பில் பின்வரும் சிபாரிசுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

- உள்ளூராட்சி மன்றங்களின் பெறுகை முறையியல் தொடர்பில் அண்மித்த கண்காணிப்பை மேற்கொள்ளல்
- பெறுகை முறையியல் மற்றும் ஆட்கள் மற்றும் நிறுவனம்சார் வகைப்பொறுப்புக்கூறல் தொடர்பில் அலுவலர்களின் திறன் அபிவிருத்தியை மென்மேலும் விருத்திசெய்தல்
- பெறுகை முறையியலின் அடிப்படைய செயன்முறையைப் பின்பற்றுவது தொடர்பில் ஒப்பீட்டு ரீதியில் விதிவிளக்குகள் பயன்படுத்தப்படுவதனால் பெறுகை கோட்பாடுகள் வீழ்ச்சியடைவதைத் தடுப்பது சம்பந்தமாக முறையான பொதுவான பலம்மிக்க சட்டங்கள் விதிகளை அறிமுகம் செய்தல்
- ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் பெறுகைத் திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டியிருத்தல் மற்றும் அதன் மூலம் செயன்முறையில் செலவாகும் செலவினத்தைக் குறைத்துக் கொள்வதற்கு வாய்ப்பளித்து முறையான உபாயமுறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.
- பெறுகை தொடர்பில் நிறுவன ரீதியாக மற்றும் அலுவலர்கள் தொடர்பில் செயலாற்றுகை தரநியமங்களை அறிமுகம் செய்தல்.
- பெறுகை முறையியலை மென்மேலும் வினைத்திறன் மற்றும் பயன்வாய்ந்ததாக அமுல்படுத்துவதற்குத் தேவையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல்
- பெறுகை முறையியலின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கு இலத்திரனியல் முறைமையை (e-governance system) அறிமுகம் செய்தல்.
- உள்ளூராட்சி மன்றங்களில் பெயரிடப்பட்டுள்ள தகவல் அலுவலரின் செயற்பணியை முறையாக வலியுறுத்தி தத்துவமுள்ளதாக்குவது தொடர்பில் தேசிய மட்டத்திலான முறையியல்களை அறிமுகம் செய்தல்.
- தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்தி பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதி செய்வதற்கு அரச நிறுவனக் கட்டமைப்பில் மற்றும் பொது மக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

# 1. அறிமுகம்

## 1.1 ஆய்வுப் பின்னணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆளுகை கட்டமைப்பானது மூன்று மட்டங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. தேசிய மட்டத்தில் தேசிய அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற நிறைவேற்று மட்டத்திலான சனாதிபதியும், சட்டவாக்கமாக பாராளுமன்றமும் இயங்கிவருவதுடன்[2] 1987 இன் 13 ஆம் இலக்க அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைய பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட மாகாண சபைகள்[3] இரண்டாம் மட்டமாக உள்ளன. பொது மக்களுக்கு மிகவும் நெருக்கமான மட்டமாக இருப்பது இறுதி மட்டமான உள்ளூராட்சி மன்றமாகும். இவை மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் என்ற வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களைத் தாபித்தல் மற்றும் அமுல்படுத்தல் தொடர்பில் நீண்டகால வரலாறு காணப்படுகின்ற போதிலும் இன்றைய நிருவாகக் கட்டமைப்பினுள் இயங்கி வருகின்ற உள்ளூ ராட்சி மன்றம் முதற்தடவையாக 1939 இன் 61 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்டது. இவை நிர்வாகக் கட்டமைப்பில் மாநகர சபைகள் என்று பெயரிடப்பட்டுள்ளன.[4] மேலும் 1947 இன் 29 ஆம் இலக்க சட்டத்திற்கு அமைய நகர சபைகள்[5] தாபிக்கப்பட்டமை மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்திற்கு அமைய பிரதேச சபைகள்[6] தாபிக்கப்பட்டமையும் பிற்காலத்தில் இடம்பெற்றன. தற்போது 23 மாநகர சபைகளும், 41 நகர சபைகளும், 277 பிரதேச சபைகளுமாக 341[7] உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கிவருகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான பணியாக இருப்பது குறித்த அதிகாரப் பிரதேசத்திற்குள் பொது சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகளை அபிவிருத்தி செய்வதும் அவற்றைப் பராமரிப்புச் செய்தல் மற்றும் குறித்த அதிகாரப் பிரதேசத்திற்குள் வாழும் பொது மக்களின் நலன்புரி மற்றும் சகல விடயங்களையும் முறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவகித்தலாகும்.[8]

உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஏற்பாடுகள் உரித்தாவது முத்திரைக் கட்டணம், நீதிமன்ற தண்டப்பணம், நேர்வரிசை அமைச்சின் ஒதுக்கீடு, மாகாண சபைகளினால் ஒதுக்கப்படும் நிதி, நிறுவனத்தினால் சம்பாதித்துக் கொள்ளப்படுகின்ற நிதி (ஆதனக் குத்தகை, வருமான வரி, உரிமைப்பத்திரக் கட்டணம், வாடகை அறவீடு) மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத்திற்கு புறம்பாகக் கிடைக்கின்ற சட்ட ரீதியான ஏற்பாடுகளின் மூலமாகும்.[9] இந்த நிறுவனங்களினால் பேணிவரப்படுகின்ற குறித்துரைக்கப்பட்ட சபை நிதியத்தில் மேற்படி நிதிகள் வைப்புச் செய்யப்படும். உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான ஏற்பாடுகள் சேவைகளை ஆற்றும் போது நலன்புரிச் செலவினங்கள் , பொருட்கள் மற்றும் சேவைகளைக் பெறுவதற்காக செலவிடப்படுகின்றது. சகல செலவினங்களையும் செய்வதானது அரசாங்க செலவினங்களைச் செய்யும் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.[10]

ஏனைய அரச நிறுவனங்களைப் போன்று உள்ளூராட்சி மன்றங்களும் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போது பின்பற்றியுள்ள நடவடிக்கைமுறை தொடர்பில் பல சிக்கல்கள் காணப்படுகின்றமை பல்வேறு கற்கைகளின் போது தெரியவந்துள்ளது. அதற்கமைய ஊழல் அதிகரிக்கின்றமை நிறுவன நோக்கங்களுடன் தொடர்புடைய பல்வேறு செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை இல்லாமை, நிறுவனத்தின் செயற்பணி தொடர்பில் வகைப்பொறுப்பு கீழ் மட்டத்தில் காணப்படுவதை அவதானிப்புச் செய்ய முடியும். மேலும் கணக்காய்வு முறையாக மேற்கொள்ளப்படாமை மற்றும் கணக்காய்வுக்குத் தேவையான ஆவணங்கள் இல்லாமை மற்றும் உள்ளகக் கணக்காய்வு முறையியல் காணப்படுகின்ற போதிலும் அது

---

2. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு 1978
3. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம்
4. Local Government Municipal Systems Act (32/2000)
5. 1947ஆம் ஆண்டின் 29ம் இலக்க மாநகரசபைக் கட்டளைச் சட்டம்
6. 1987ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டம்
7. உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாற்று அறிக்கை 2018 இற்கு அமைய அம்பகமுக பிரதேச சபை, 3 பிரதேச சபைகளாகவும், நுவரெலியா பிரதேச சபை 3 பிரதேச சபைகளாகவும் பிரிக்கப்பட்டு புதிதாக 4 பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டுள்ளன.
8. 1939 இன் 61 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, 1947 இன் 29 ஆம் இலக்க மாநரக சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு
9. https://www.unescap.org/sites/default/files/SRI_LANKA_presentation.pdf, 1939 இன் 61 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 158 ஆம் பிரிவுஇ
10. 1939 இன் 61 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 159 ஆம் பிரிவுஇ


முறையாக மேற்கொள்ளப்படாமை, செயல்ரீதியான வெளிப்புற கணக்காய்வு முறையியல் இல்லாமை, இதனால் நிதிசார் செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் தகவல்கள் சென்றடையாமை மற்றும் பொது மக்கள், அரசியல் தலைமைத்துவம் மற்றும் சிவில் ஊழியர்களுக்கு இடையே வெளிப்படைத்தன்மை இல்லாமை ஆகிய விடயங்கள் பிரதானமானவையாகும்.[11]

அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்தல், விலைக்கு உகந்த பெறுமதியை உறுதி செய்யும் வகையில் செலவினங்களை மேற்கொள்ளாமை, பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் முறையான திட்டத்தைப் பின்பற்றாமை, பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம்,[12] வினைத்திறனின்மை மற்றும் பொது அதிகாரஅமைப்புக்களினால் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற தொகைகள் பற்றிய புரிந்துணர்வு இன்றி கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் அரசாங்க நிதி ஒழுங்குமுறைகளைப் பின்பற்றாமை காரணமாக இடம்பெறுகின்ற பாதகமான நிலைமைகள் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்கொண்டுள்ள சவால்களை மென்மேலும் தீவிரப்படுத்துகின்றன.

குறிப்பாக இறுதியாக அரசாங்க நிறுவனங்களின் பொது நிதியைப் பயன்படுத்துவது தொடர்பில் வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் வகைப்பொறுப்புக்கூறல் பலவீனமாக இருப்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படுவது ஊழல்மிக்க செயற்பாடுகள் காரணமாக மக்களின் நிதி வீண்விரயமடைவது அல்லது வீணாவதும் அதன் மூலம் சமூகத்தில் வளப் பகிர்வு மற்றும் சமூக நலன்புரி வசதிகளை அனுபவிப்பது தொடர்பில் சமூக சமமின்மை வளர்ச்சியடைவதும் அதனூடாக வறுமை மென்மேலும் விஸ்தரிக்கப்படுவது உள்ளடங்களாக சமூக மற்றும் பொருளாதார சிக்கல்கள் பல ஏற்படுகின்றன.[13]

மேலே குறிப்பிடப்பட்ட சகல சிக்கல்களும் நிறுவன ரீதியாக நிதி நிருவாகத்தின் அதாவது நிதி அறவிடல் மற்றும் செலவிடும் செயன்முறையில் காணப்படுகின்ற பலவீனங்களை வெளிப்படுத்துகின்றது. இதன் போது குறிப்பாக அரச நலன்புரிச் செயன்முறையை பிரதேச மட்டத்திற்கு கொண்டுசெல்வதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை செலவிடுவது பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும். எனவே இந்தக் கற்கையின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களினால் நிதி செலவிடுவது மேற்கொள்ளப்படுகின்ற பெறுகை முறையியல் பற்றி ஆராயப்படுகின்றது. இதன் போது உள்ளூராட்சி மன்றங்கள் தமது பெறுகை முறையியலில் காணப்படுகின்ற சட்டரீதியான சட்டகத்துக்குள் எந்தளவு தூரத்திற்கு அமுல்படுத்தப்படுகின்றது அது தொடர்பில் வெளிப்படைத்தன்மை எந்தளவு தூரத்திற்கு உறுதிப்படுத்தப்படுகின்றது மற்றும் மேற்படி நிறுவனங்களினால் ஊழல் செலவினத்தைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பது பற்றி ஆராயப்படுகின்றது. எனவே உள்ளூராட்சி மன்றங்களின் நிதி முகாமைத்துவத்தில் பெறுகை முறையியலை விரிவாக ஆராய்வது இந்தக் கற்கையின் போது மேற்கொள்ளப்படுகின்றது. ஆராய்ச்சிக் கற்கையின் கட்டங்களை பின்வருமாறு சமர்ப்பிக்க முடியும்.

**படம் 01 : கற்கை முறையியல்**




11. Ramesh, R, Ijhas, M.M, and Dickwella, R (2013). Accountability, Transparency and Corruption in Decentralized Governance: A case of Local Government in Sri Lanka. Proceedings of the Third International Symposium, SEUSL: 6-7 July 2013, Oluvil, Sri Lanka
12. Paul Smoke,(2015), Quality Support Facilities in the field of decentralization, Local Governance & Local Development,Decentralization in Sri Lanka, THE EUROPEAN UNION'S ADM MULTI PROGRAMME
13. Paul Smoke,(2015), Quality Support Facilities in the field of decentralization, Local Governance & Local Development,Decentralization in Sri Lanka, THE EUROPEAN UNION'S ADM MULTI PROGRAMME

**I. உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டு மீளாய்வு:** உள்ளூராட்சி மன்றங்களைத் தாபித்தல், அதன் ஒழுங்கமைப்பு, அலுவலர்கள் ∴உறுப்பினர்களை நியமனம் செய்தல் மற்றும் அதன் செயற்பாடு பற்றி ஆராயப்படும்.

**II. உள்ளூராட்சி மன்றத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற பெறுகை முறையியல் தொடர்பிலான சட்டங்கள் / விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய கற்கை:** பொது மக்களின் அதிகார அமைப்புக்கள் என்ற வகையில் இயங்கிவருகின்ற அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு சட்டங்கள்∴ விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் காலத்திற்குக் காலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், மேற்படி சட்டங்கள்∴ விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தி சகல நடவடிக்கைகளையும் வெளிப்படைத்தன்மையுடன் அமுல்படுத்துவதற்கு ஒவ்வொரு அரச நிறுவனமும் கட்டுப்பட்டுள்ளது. எனவே பெறுகை தொடர்பில் தேசிய மட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள சட்டங்கள்∴ விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்படுகின்றது.

**III. உள்ளூராட்சி மன்றத்தினால் நடைமுறையில் அமுல்படுத்தப்படுகின்ற பெறுகை முறையியல் தொடர்பிலான தரவுகளைச் சேகரித்தல்:** இதன் போது வினாக்˙கொத்தைப் பயன்படுத்தி பின்வரும் துறைகள் தொடர்பிலான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேற்படி தகவல்களைச் சேகரிப்பதற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 14(ஆ) பிரிவுக்கு அமைய பொது மக்களுக்கு தகவல் அறியும் உரிமையை வலுவூட்டி அறிமுகம் செய்யப்பட்டுள்ள 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைகள் பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைதாக்கிக் கொள்ளப்படுகின்றன.

a. வழங்குநர்களை பதிவு செய்தல்

b. தொழில்நுடபக் குழுக்களைத் தாபித்தல்

c. விலைமனுக் கோரும் செயன்முறை

d. பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்

e. கணக்காய்வு

**IV. தரவுப் பகுப்பாய்வு ஊடாக உள்ளூராட்சி மன்றத்தினால் அமுல்படுத்தப்பட வேண்டிய மற்றும் அமுல்படுத்தப்படுகின்ற முறையியல்களில் காணப்படுகின்ற வித்தியாசங்களை இனங்காணல்:** அரச நிறுவனங்களினால் பின்பற்றப்பட வேண்டிய பெறுகை வழிகாட்டல்கள் பொது மக்கள் அதிகார அமைப்புக்கள் என்ற வகையில் உள்ளூராட்சி மன்றங்களினால் எந்தளவு தூரத்திற்கு அமுல்படுத்தப்படுகின்றன என்பதை இனங்காண்பது இக்கற்கையின் முக்கிய நோக்கமாகும். அவ்வாறு பின்பற்றப்படுகின்ற செயன்முறைகளில் இடைவெளி காணப்படுகின்றதா, மேற்படி இடைவெளி காரணமாக மக்களின் பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்படல் அல்லது ஊழல் இடம்பெறுகின்றதா என்பதும் மென்மேலும் விரிவாக ஆராயப்படும். இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களினால் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் மக்களின் உரிமையை அடிப்படையாகக் கொண்டு மேற்படி நிறுவனங்கள் மக்களின் நிதியைப் பயன்படுத்துவதன் வெளிப்படைத்தன்மை எந்தளவுக்கு உறுதி செய்யப்படுகின்றது என்பதும் ஆராயப்படும்.

**V. முடிவுகள் மற்றும் சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்:** கற்கைச் செயன்முறையின் இறுதிக் கட்டமாக முடிவுகள் மற்றும் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்படுவதுடன் இது மூன்று பகுதிகளின் கீழ் கலந்துரையாடப்படும்.

- உள்ளூராட்சி மன்றங்களின் பெறுகை முறையியல்
- ஊழல் சம்பந்தமான செலவினம்
- உள்ளூராட்சி மன்றத்தினால் தகவல் அறியும் சட்டம் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற வெளிப்படைத்தன்மை.

## 1.2 உள்ளூராட்சி மன்ற நிறுவனம்சார் பின்னணி

### உள்ளூராட்சி மன்ற நிறுவனக் கட்டமைப்பும், ஒழுங்கமைப்பும்

இலங்கையில் 23 மாநகர சபைகளும், 41 நகர சபைகளும், 277 பிரதேச சபைகளும் என்ற வகையில் இன்று மொத்தமாக 341 உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கிவருவதுடன், இந்நிறுவனங்களின் நேர்வரிசை அமைச்சாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களை பயிற்றுவிப்பதானது 1999 இன் 31 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.[14]

### உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்ளல் மற்றும் அதன் செயற்பாடு

உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்வது தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் அடிக்கடி திருத்தம் செய்யப்பட்டு வருவதுடன், இறுதியாக பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டிருப்பது 2017 இன் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் (திருத்த) சட்டத்தின் மூலமாகும். அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் 60௴ ஆனோர் விருப்பு வாக்கு அடிப்படையில் தெரிவு செய்துகொள்ளப்படுவதுடன், பிரதிநிதிகளில் 40௴ ஆனோர் விகிதாசார அடிப்படையில் அரசியல் கட்சிகள் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் விகிதாராத்தின் அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் சமர்ப்பிக்கின்ற பட்டியலின் மூலம் தெரிவு செய்துகொள்ளப்படுவார்கள். 2016 இன் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் மூலம் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களில் 25% ஆன பெண் பிரதிநிதித்துவம் காணப்படல் வேண்டும் என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் பிரதிநிதிகள் 8708 பேர் 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.[15]

தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளின் பதவிக் காலம் 4 வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன் மத்திய அரசின் விருப்பத்தின் பேரில் ஒரு வருடத்தினால் இந்தப் பதவிக் காலத்தை நீடிக்கும் ஆற்றல் உள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளில் 2/3 ஆனோரின் விருப்பத்தின் பேரில் விடயப்பொறுப்பு அமைச்சரினால் அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாநகர சபைகளுக்கு மாநகரமுதல்வர் மற்றும்

**அட்டவணை 01 : இலங்கையின் உள்ளூராட்சி மன்ற ஒழுங்கமைப்பு**

| மாகாணம் | மாவட்டம் | உள்ளூராட்சி மன்றம் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் | |
| மேல் | 3 | 7 | 14 | 27 | 48 |
| சப்ரகமுவ | 2 | 1 | 3 | 25 | 29 |
| தெற்கு | 3 | 3 | 4 | 42 | 49 |
| மத்திய | 3 | 4 | 6 | 33 | 43 |
| ஊவா | 2 | 2 | 1 | 25 | 28 |
| வடமத்தி | 2 | 1 | 0 | 25 | 26 |
| வடமேல் | 2 | 1 | 3 | 29 | 33 |
| கிழக்கு | 3 | 3 | 5 | 37 | 45 |
| வடக்கு | 5 | 1 | 5 | 28 | 34 |
| மொத்தம் | 25 | 23 | 41 | 277 | 341 |

**மூலம் : உள்ளூராட்சி மன்றங்களின் கூட்டுத்தொகை - உள்ளக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு**

14. http://lgpc.gov.lk/web/index.php?lang=en
15. https://en.wikipedia.org/wiki/2018_Sri_Lankan_local_elections

உபநகரமுதல்வர்களாக நியமனம் பெறுகின்ற பிரதிநிதிகளுக்கும், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு தவிசாளர் மற்றும் உபதவிசாளருக்கும் பிரதான அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் அளிக்கப்படுவதுடன், அதற்கமைய சகல பிரதிநிதிகளினதும் அதிகாரம் மற்றும் பொறுப்புத் தீர்மானிக்கப்படுகின்றது.[16] மேலும் உள்ளூராட்சி மன்றங்களின் சேவையாற்றுவோராக இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க சிவில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை உள்ளடக்கியதாக இருப்பார்கள். எப்போதும் இந்த உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர் அல்லது செயலாளராக செயற்படுவது அரசாங்க சிவில் சேவையில் ஈடுபட்டுள்ள நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த அலுலவர் ஒருவர் அல்லது தகைமைவாய்ந்த அலுவலர்களாவார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிதி நிருவாகத்தின் பொறுப்பு நிதிக் குழுவுக்குப் பொறுப்பளிக்கப்படுவதுடன், மாநகர சபைகளின் நிதிக் குழுவின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 5 பேரும் நிறைவேற்று அலுவலர் என்ற வகையில் மாநகர முதல்வரும் உள்ளடங்குவர்.[17] மாநரக சபைகள் சட்டத்தின் 25 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பணிக்குமான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களைக் கொண்ட குழுக்களைத் தாபிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிரதேச சபைகள் சட்டத்திலும் 12 ஆம் பிரிவின் மூலம் நிதி மற்றும் கொள்கைகளுக்கான குழுவை நியமனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நிதி தொடர்பிலான குழுவின் மூலம் உள்ளூராட்சி மன்றத்தின் நிதி நடவடிக்கைகள் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது மக்களுக்கு நெருக்கமான மற்றும் மக்களின் தேவைகளை கிராமிய மட்டத்தில் பூர்த்தி செய்வதும் அதற்கு அவ் அதிகாரப் பிரதேசத்தின் சமுதாயத்தை பங்கேற்கச் செய்துகொள்ளும் பிரதான நோக்கத்துடன் இயங்கிவருகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பணி குறித்த சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிலும், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிலும், பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடாக இருப்பது ஒவ்வொரு நியாயாதிக்க அதிகாரப் பிரதேசத்திற்கும் தாபிக்கப்பட்ட மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபையானது அப்பிரதேசத்திற்கான உள்ளூராட்சி மன்றமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பொது சுகாதாரத்திற்கு, பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், பொது வீதிகள், பொதுவாக அப்பிரதேசத்திற்குள் பொது மக்களின் நலன்புரி, வசதி மற்றும் நலனோம்புகை மற்றும் சகல வசதிகளையும் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் உட்பட சகல விடயங்களையும் முறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவகித்தலாகும்.

## 1.3 பொது அதிகாரஅமைப்புக்களின் பெறுகை முறையியல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பெறுகை முறையியல் பற்றிக் குறித்துரைக்கும் ஏற்பாடுகள் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் 44(1) உறுப்புரைக்கு அமைய சனாதிபதியினால் அமைச்சர் அல்லது அமைச்சுக்கு எந்தவொரு விடயத்தையும் பொறுப்பளிக்க அதிகாரம் உள்ளது. அதற்கமைய சனாதிபதியினால் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பில் பொருட்கோடல் செய்வதற்கு அல்லது ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சருக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது.[18]

அரச துறையின் நிதி முகாமைத்துவம் தொடர்பிலான நிதி ஒழுங்குவிதிகள் 1966 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், 1992 இல் இது மீண்டும் திருத்தங்களுடன் பிரகடனம் செய்யப்பட்டது. இதன் XIII ஆம் அத்தியாயத்தில் அரச நிறுவனங்களினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குவிதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.[19]

அரச நிறுவனங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை வழிகாட்டல் தொகுப்பொன்று 2006 ஆம் ஆண்டில் தேசிய பெறுகை முகவராண்மை நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டது.[20] தேசிய பெறுகை நிறுவனத்தின் தலைவரின் தே.பெ.நி. சுற்றறிக்கை இலக்கம் 08 மற்றும் 2006 சனவரி மாதம் 25 ஆம் திகதிய சுற்றறிக்கை மூலம் இந்த வழிகாட்டல்கள் சகல அரச நிறுவனங்களினதும் பெறுகைச் செயன்முறைக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவாறு தத்துவமுள்ளதாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மத்திய அரசின் கீழ் இயங்கிவருகின்ற அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்கள் மற்றும் அரசின் சகல உள்ளூராட்சி மன்றங்களினாலும் இந்த வழிகாட்டல்கள் பின்பற்றப்படல் வேண்டும்.

---

16. 1939 இன் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம், 1947 இன் 29 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம், 2012 இன் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
17. 1947 இன் 29 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 25.4.5.6. மற்றும் 28 ஆம் பிரிவுகள்
18. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 1978
19. Financial Regulations of the Government of the Democratic Socialist Republic of Sri Lanka, 1992
20. பெறுகை வழிகாட்டல் தொகுப்பு 2006

அத்துடன் தேசிய பெறுகை முகவராண்மை நிறுவனத்தின் தலைவர்/பிரதம நிறைவேற்று அலுவலரின் தே.பெ.நி. சுற்றறிக்கை இலக்கம் 09 மற்றும் 2006 மார்ச் மாதம் 03 ஆம் திகதிய சுற்றறிக்கை மூலம் தத்துவமுள்ளதாக்கப்பட்டுள்ள 2006 இன் பொருட்கள் மற்றும் வேலைகள் பற்றிய பெறுகை வழிகாட்டல் தொகுப்புடன் பயன்படுத்தப்பட வேண்டிய பெறுகை நடவடிக்கை தொகுப்பும்[21] சகல அரச, பகுதியளவிலான அரச மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினால் பின்பற்றப்படுவது அத்தியாவசியமாகும். இந்த பெறுகை வழிகாட்டல் தொகுப்பு வெளிப்படைத்தன்மை, வகைப்பொறுப்புக் கூறல் மற்றும் பணத்திற்கு நிகரான பெறுமதி ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், பின்வரும் 8 அம்சங்களின் ஊடாக அரச நிறுவனங்களின் பெறுகைச் செயன்முறை தயார் செய்யப்பட வேண்டிய விதம் பற்றி விபரிக்கின்றது.

- நிறுவனங்கள், பெறுகைக் குழு மற்றும் அவற்றின் பணிகள்
- பெறுகை முறை
- பெறுகைக்கான முன் ஆயத்தம் மற்றும் திட்டமிடல்
- விலைமனுக் கோரல் ஆவணங்கள்
- விலைமனுக் கோரலை நிறைவு செய்தல் மற்றும் விலைமனுக்களை திறத்தல்
- விலைமனுக்களை மதிப்பீடு செய்தல்
- ஒப்பந்தம் கையளித்தல்
- விசேட பெறுகை முறை

இதற்கு மேலதிகமாக பின்வரும் சட்டங்கள் மற்றும் காலத்திற்குக் காலம் உள்ளூராட்சி மன்றங்களுக்காக தத்துவமுள்ளதாக்கப்படும் வகையில் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மூலமும் அந்நிறுவனங்களின் பெறுகைச் செயன்முறையின் போது பின்பற்ற வேண்டிய சட்டங்கள், விதிகள் பற்றிய நியதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

- 1939 இன் 61 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 38, 39 மற்றும் 40 ஆம் பிரிவுகளின் மூலம் ஒப்பந்தம் தொடர்பில் தவிசாளரினால் செலவின வரையறை மற்றும் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் ரூபா 100,000.00 ஐ விட மேற்பட்ட செலவினங்களைச் செய்யும் போது அல்லது பொருட்கள், மூலப்பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது மற்றும் பிரேரணையொன்றின் மூலம் அல்லது வேறு வகையிலான அங்கீகாரம் வழங்கப்படாதுள்ள சந்தர்ப்பத்தில் தவிசாளரினால் அறிவித்தல் வெளியிடப்படுவதன் மூலம் விலை மனுக்களைக் கோரல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 181 பிரிவின் மூலம் அரை ஆண்டு அடிப்படையில் கணக்காய்வை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- 1947 இன் 29 ஆம் இலக்க மாநரக சபைகள் கட்டளைச் சட்டத்தின் 228, 229 மற்றும் 230 ஆகிய பிரிவுகளின் ஒப்பந்தங்களுக்கு அறிவித்தல்களை வெளியிடல் கேள்வி கோரல் பற்றி மற்றும் அது தொடர்பிலான ஆணையாளரின் அதிகாரங்கள் மற்றும் வரையறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 1.4 தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டம்

அரசியலமைப்பின் 14(ஆ) உறுப்புரைக்கு அமைய தகவல் அறிவது பொது மக்களின் அடிப்படை உரிமையொன்றாகும்.[22] இந்த தகவல் அறியும் உரிமையை மென்மேலும் வலுவூட்டி 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் இது 2016 ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டம் முக்கியமாக தகவல்களை பிரவேசிப்பதற்கான உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கும், தகவல்களை பிரவேசிப்பதை நிராகரிப்பதற்கான காரணங்களை குறித்துரைப்பதற்கும் தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும் தகவல் அறியும் அலுவலர்களை நியமனம் செய்வதற்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான முறையான நடவடிக்கைமுறையை அறிமுகம் செய்வதற்கும் அது சம்பந்தமான விளைவாய்ந்தன்மை வாய்ந்த விடயங்களுக்கும் ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்காக இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.[23]

பொது மக்களுக்குத் தமது வரித்தொகையிலிருந்து நிருவகிக்கப்படுகின்ற மற்றும் இயங்கிவருகின்ற அரச நிறுவனங்கள் தொடர்பில், மேற்படி சட்டத்தின் II ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களுக்கு தகவல்களுக்குப் பிரவசிப்பதை நிராகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்து ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அந் நிறுவுனங்கள் கட்டுப்பட்டுள்ளதுடன், அதற்காக தகவல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்யத் தேவையான ஏற்பாடுகளும் சட்டத்தின் 23 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. தகவல்களை பிரவேசிப்பதற்கான முறையியல் 24 ஆம் பிரிவில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 25 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சந்தர்ப்பங்களில் தவிரஇ கோரப்பட்டுள்ள தகவல்களை உச்சளவாக 14 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்குப் பெற்றுக்

21. பெறுகை நடவடிக்கைத் தொகுப்பு 2006
22. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 1978, அத்தியாயம் ஐஐஐஇ பிரிவு14 (அ)
23. 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைகள் பறிய சட்டத்தின் அறிமுகம்

கொடுப்பதற்கு தகவல் அலுவலர் கட்டுப்பட்டுள்ளார். மேலதிக நேரம் அவசியமாயின் அது பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிப்பது அவசியமாகும். இந்த சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பொது மக்கள் பொது நிறுவனங்களின் பெறுகை முறையியல் பற்றிய தகவல்களையும் அறிந்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

## 1.5 கற்கை முறையியல் மற்றும் கற்கையின் நோக்கம்

இவ் அறிக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உள்ளூராட்சி மன்றங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள பெறுகை முறையியல் பற்றி மேற்கொள்ளப்பட்ட கற்கை தொடர்பிலான தகவல்களை சமர்ப்பிப்பதற்காகத் தயார் செய்யப்பட்ட அறிக்கையாகும். பொது நிறுவனங்களின் பெறுகை முறையியலில் தாக்கம் செலுத்துகின்ற சட்ட ரீதியான ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு அரச நிறுவனத்தினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது அச்செயற்பாடு வெளிப்படைத்தன்மைமிக்கதாக (Transparency) இருத்தல் வேண்டும் என்பதுடன், நிறுவன மற்றும் தனிப்பட்ட ரீதியான பொறுப்புக்கூறும் தன்மை (Accountability) மற்றும் ஆகக் குறைந்த விலையின் (Value For Money – VFM) அடிப்படையில் தீர்மானிக்கப்படல் வேண்டும்.[24]

2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நிறுவனங்களினால் பின்பற்றப்பட்ட பெறுகை செயன்முறை பற்றி 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பப்படிவம் (RTI 01) மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக 42 வினாக்களைக் கொண்ட (திறந்த) வினாக்கொத்து சமர்ப்பிக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்கள் வழங்கும் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்துகொள்வதற்கான உதவி ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுத்தருமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் நிறுவனத்தின் தகவல் அலுவலரின் ஆள்அடையாளத்தை உறுதி செய்வதற்குத் தேவையான தகவல்களும் வினாக்கொத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டன.

உள்ளூராட்சி மன்றங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட வினாக்கொத்து பெறுகை செயன்முறையில் குறிப்பிடப்பட்ட முக்கியமான சில துறைகளைக் கவனத்தில் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்டது. அதற்கமைய, வழங்குநர்களைப் பதிவு செய்தல், பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் செயன்முறை, விலைமனுக் கோரல், கேள்விக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழுக்களின் செயற்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன், இதன் போது ஒரு மாவட்டத்திலிருந்து 3 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு 75 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ் வினாக்கொத்துக்கள் அனுப்பிவைக்கப்பட்டன. இதற்காக 14 நாள் கால அவகாசம் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், குறித்த காலப்பகுதிக்குள் 35 நிறுவனங்கள் (46.6மூ ) தகவல்களை வழங்கியிருந்தன.

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான தகவல்களுக்கு மேலதிகமாக பெறுகை முறையியல் தொடர்பில் பின்வரும் படிமுறைகளின் ஊடாக வினாக்கொத்து தயார்செய்யப்பட்டது.

**அட்டவணை 02 : வினாக்கொத்தில் உள்ளடங்கும் பிரதான துறைகள்**

| பெறுகை தொடர்பில் வினவப்பட்ட பிரதான துறைகள் | ஆராயப்பட்ட தகவுதிறன்கள் |
|---|---|
| வழங்குநர்களைப் பதிவு செய்தல் | a) அறிவித்தலை வெளியிடல்<br>b) வழங்குநர்களின் பட்டியல்<br>c) சட்டம்/ ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுவது பற்றிய தகவல்களை ஆராய்தல் |
| விலைமனுக் கோரல் | a) விலைமனுக் கோர வேண்டிய பொருட்களை இனங்கண்டிருத்தல்<br>b) விலைமனுக் கோரும் பிரதான படிமுறைகளை பின்பற்றல்<br>c) விலைமனுதாரர்கள் பற்றிய விபரம்<br>d) விலைமனுக்கள் |
| பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்தல் | a) வழங்குநர்களுக்கு புறம்பாக கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகள்<br>b) அதனை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள்<br>c) சட்டம்/ ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுவது பற்றிய தகவல்களை ஆராய்தல் |
| தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு | a) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்துவம்<br>b) நியமனம் செய்யும் முறையியல்<br>c) பின்பற்றப்பட்ட அடிப்படைக் கொள்கைகள் |
| கணக்காய்வு | a) உள்ளக கண்காய்வு அலுவலரை நியமனம் செய்தல்<br>b) உள்ளக கணக்காய்வு அலுவலரின் செயற்பணி<br>c) உள்ளக கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்தல்<br>d) வெளி கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்தல் |

24. Mr. P. Algama, Director-General,2016; Ensuring Good Governance in Procurement in Sri Lanka; https://wbnpf.procurementinet.org/

உள்ளூராட்சி மன்றம் என்பது அரசின் தேசிய வரவு செலவுத்திட்டத்தினால் பாரியளவு நிதி செலவிடப்பட்டு தேசிய மட்டத்திலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் கிராமிய மட்டத்தில் மக்களின் சமூக நலன்புரி திட்டங்கள் தொடர்பில் மத்திய அரசை பிரதிநிதித்துவம் செய்து இயங்கிவருகின்ற நிருவாகக் கட்டமைப்பாகும். இக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு மத்திய அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்படுகின்றன. அதற்கமைய 2017 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய். 21இ843இ883 மில்லியனும், 2018 ஆம் ஆண்டில் ரூபாய். 6070000 மில்லியனும் ஆகும். அத்தோடு, 2019 ஆம் ஆண்டுக்கான ஒத்தேச செலவினம் ரூபாய். 3430000 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச் செலவினங்களைச் செய்வது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் வெளிப்படைத்தன்மை, நிறுவனம்சார் மற்றும் தனிநபர் அடிப்படையில் நிறுவனத்தினால் கொள்வனவுச் செயன்முறையின் போது அடையப்பெற்றுள்ள பயன்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் பொது மக்கள் நிறுவனத்தின் தகவல்களுக்குப் பிரவேசிப்பதற்குள்ள ஆற்றல் பற்றி ஆராய்வதும் இந்தக் கற்கையின் அடிப்படை குறிக்கோளொன்றாகும்.

# 2. கருத்திட்டத்தின் திட்டம்

இக் கற்கை 3 காரணிகளை பிரதானமாகக் கொண்டு நடத்தப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதில் காணப்படுகின்ற சட்ட ரீதியான கட்டமைப்பு எந்தளவு தூரத்திற்கு பின்பற்றப்படுகின்றன என்பதும் இதன் போது அதிகாரிகளினால் மோசடி மற்றும் ஊழல் மிக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற நிலைமைகள் பற்றி அவதானிப்புச் செய்யப்படுகின்றதா என்பதும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊழல் செலவினம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை ஆராய்வதற்கு பிரதானமாக திட்டமிடப்பட்டுள்ளதுடன், தகவல் அறியும் உரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பொது மக்களுக்கு பொது நிறுனங்கள் தொடர்பிலான தகவல்களை அறிவதற்குள்ள ஆற்றல் பற்றி ஆராய்வதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே கற்கையின் நோக்கங்களை பின்வருமாறு பொழிப்புரையாக்கிக் குறிப்பிட முடியும்.

## 2.1 கருத்திட்ட நோக்கங்களும் இலக்குகளும்

1. உள்ளூராட்சி மன்றங்களின் பெறுகை முறையியல் பற்றிய தகவல்களைச் சேகரித்தல்
2. உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படுகின்ற பெறுகை முறையியல்கள் எந்தளவு தூரத்திற்கு பின்பற்றப்படுகின்றன என்பது பற்றி ஆராய்தல்
3. உள்ளூராட்சி மன்றத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற முறையியல்கள் மற்றும் நியம முறையியல்களுக்கு இடையில் காணப்படுகின்ற இடைவெளியை இனங்காணல்
4. பெறுகை முறையியலில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் மோசடி நிலைமைகள் பற்றிய ஆய்வு
5. உள்ளூராட்சி மன்றங்களின் தகவல் அறியும் உரிமை சட்டம் பற்றிய அறிவை ஆராய்தல்.
6. தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ளல்
7. நிறுவன ரீதியாக உள்ளூராட்சி மன்றங்களின் நிதி முகாமைத்துவ முறையியல் பற்றி ஆராய்தல்.

## 2.2 கற்கையை உறுதிப்படுத்தல்

1. வினாக்கொத்தின் ஊடாக சேகரித்துக் கொள்ளப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையை தயார் செய்தல்
2. உள்ளூராட்சி மன்றத்தினால் பின்பற்றப்படுகின்ற முறையியல்களின் இடைவெளிகளின் இசைவானதன்மை
3. உள்ளூருாட்சி மன்ற பெறுகை முறையியலில் காணப்படுகின்ற பலவீனங்களின் இசைவானதன்மை
4. ஆராய்ச்சிக் கற்கை அறிக்கை

## 2.3 கருத்திட்ட வரையறைகள்

இந்தக் கற்கையின் கண்டுபிடிப்புக்கள் பின்வரும் வரையறைக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கற்கைத் துறை மற்றும் காலஎல்லை:**
கற்கைத்துறையானது உள்ளூராட்சி மன்றங்களின் பெறுகை முறையியலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் தொடர்பிலான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

**கற்கைகளில் உள்ளடங்கும் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை:**
கற்கைக்குக் காணப்படுகின்ற காலஎல்லைக்குள் 341 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆய்வை நடாத்த முடியாது போனதன் காரணமாக 75 நிறுவனங்களின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன.

**தகவல்களைச் சேகரித்தல்:**
உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான தகவல்களைச் சேகரிக்கும் போது கற்கை முறையியலானது கேள்விக் கொத்து மூலம் தகவல்களைச் சேகரிக்க வேண்டி ஏற்பட்டதன் காரணமாக ஒரு தடவை மாத்திரம் வழங்கப்பட்ட விடைகளின் அடிப்படையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

**உள்ளூராட்சி மன்றங்கள் பதிலளித்தல்:**
நிறுவன ரீதியாக ஒட்டுமொத்த கற்கைக்கும் பதிலளித்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் கேள்விக்கொத்துக்கு பதிலளித்துள்ள தன்மைக்கு அமைய கற்கையின் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

அதற்கமைய மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்ட 75 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கேள்விக்கொத்துக்கள் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும்இ பதிலளித்துள்ள உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 35 மாத்திரமாகும். உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பப்பட்ட கேள்விக் கொத்தில் 42 கேள்விகள் காணப்பட்டதுடன், ஒரு கேள்விக்கான பதில் மற்றொரு கேள்வியுடன் அல்லது பல கேள்விகளுடன் சம்பந்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சகல வினாக்களுக்கும் விடை எதிர்பார்க்கப்படுவதுடன் இது ஒட்டுமொத்த வினாவின் பூரணமான விடையைத் தயார் செய்வதற்கு அவசியமாகின்றது. எவ்வாறாயினும் ஒருசில உள்ளூராட்சி மன்றங்களினால் ஒரு வினாவுக்கு பதில் தயார் செய்யப்பட்டுள்ள போதிலும் அதனை உறுதி செய்யத் தேவையான எழுத்து மூலமான தகவல்கள் இல்லாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டதனால் தரவுப் பகுப்பாய்வு மேற்படி தகவல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுகின்றது.

**பயன்படுத்தப்படுகின்ற வரைவிலக்கணம்:**
இந்தக் கற்கையானது மிகவும் சிக்கலான மற்றும் பரந்ததொரு விடயப்பரப்பைக் கொண்டதாக காணப்படுவதனால், பின்வரும் வரைவிலக்கணத்துக்கு உட்பட்டு கற்கை மேற்கொள்ளப்படுகின்றது.
உள்ளூராட்சி மன்றங்கள்: 1939 இன் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம், 1947 இன் 29 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் இக் கற்கையின் போது உள்ளூராட்சி மன்றங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பெறுகை:** மக்களின் நிதியினால் அல்லது கடன், கொடை, அன்பளிப்பு, பரிசு, பங்களிப்புத் தொகை மற்றும் வேறு பெறுகைகளின் மூலம் அல்லது வேறு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கின்ற நிதிகளிலிருந்து, பெறுகை செயன்முறை ஊடாக பொருட்கள் மற்றும் சேவைகள் உகந்த முறையில் கொள்வனவு மெற்கொள்ளப்படுகின்றனவா என கருதப்படுகின்றது. மேற்படி பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு அல்லது வேலைகளை செய்வதற்கு துணைச்சேவைகள் உள்ளிட்ட கொள்வனவுகள், வாடகைக்குப் பெறல், குத்தகைக்குப் பெறல் அல்லது குத்தகைக் கொள்வனவு அடிப்படையில் பெறுவதாகும் .

**ஊழல்:** அரச துறையில் சேவையாற்றுகின்ற அரசியல்வாதிகள் அல்லது அரச ஊழியர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள், நண்பர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மற்றும் தகுதியற்றவகையில் தீர்மானம் மேற்கொண்டு செயற்படுவதாகும்.

25. பெறுகை வழிகாட்டல் தொகுப்பு 2006


# 3. கருத்திட்டக் கண்டுபிடிப்புக்கள்

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் கற்கைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் ஆராய்ச்சியின் பிரதான நோக்கங்களில் மேற்படி நிறுவனங்களின் பெறுகை முறையின் போது பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்கள் நிறுவன ரீதியாக எந்தளவு தூரத்திற்கு பின்பற்றப்படுகின்றன அல்லது அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊழல் இடம்பெற்றுள்ளதா மற்றும் பெறுகை செயன்முறையில் அவ்வாறான மோசடி ஊழல்களுக்கான வாய்ப்பு உள்ளதா என்பதும் அது தொடர்பில் மேற்படி நிறுவனங்கள் எந்தளவுக்கு வெளிப்படைத்தன்மையுடன் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பது பற்றி ஆராயப்பட்டது. அத்துடன் இந் நிறுவனங்கள் தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் எந்தளவுக்கு பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்கின்றது பற்றி ஆராய்வதும் கற்கையின் மற்றொரு நோக்கமாகும். இந் நோக்கங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற கற்கையின் தகவல்களுக்கு அமைய பின்வரும் நிலைமைகள் அவதானிப்புச் செய்யப்படுகின்றன.

### கேள்விக்கொத்துக்கு பதிலளித்தல்

ஒரு மாவட்டத்திலிருந்து 3 உள்ளூராட்சி மன்றங்கள் வீதம் 75 உள்ளூராட்சி மன்றங்களிடம் தகவல்கள் கோரப்பட்டது, அவற்றில் 35 நிறுவனங்கள் பதிலளித்திருந்தன. பின்வரும் விளக்கப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாநகர சபைகள் 04 (11%), நகர சபைகள் 11 (31%), பிரதேச சபைகள் 21 (51%) ஆகும்.

**பதிலளித்த உள்ளூராட்சி மன்றங்கள்**





பெறுகை சட்டங்கள், விதிகள் மற்றும் வழிகாட்டல்களைப் பின்பற்றல்
வழங்குநர்களைப் பதிவு செய்தல், பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த கேள்வி கோரல், அக்கொள்வனவு தொடர்பிலான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் கொள்வனவு தொடர்பிலான ஆகக் குறைந்த விலை, வெளிப்படைத்தன்மை மற்றும் தரமான கொள்வனவு இறுதியாக அதற்கு உகந்த அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல் என்பன நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய அத்தியாவசியமானதாகும். இந்த பெறுகை விதிகளைப் பின்பற்றுவது பற்றி மேற்கொள்ளப்பட்ட கற்கையின் போது உள்ளூராட்சி மன்றங்கள் பின்வரும் பதில்களை அளித்திருந்தன.

வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பாக நிறுவனங்களுக்கு நேரடியான 3 கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டு தொடர்பில் வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக 3 மாநகர சபைகள், 9 நகர சபைகள் மற்றும் 10 பிரதேச சபைகள் என்ற வகையில் 22 நிறுவனங்கள் மாத்திரம் பதிலளித்துள்ளன. வழங்குநர்களை பதிவு செய்வது தொடர்பான அறிவித்தல்கள் வெளியிடப்பட்ட காலப்பகுதியை வினவிய போது 21 நிறுவனங்கள் 14 நாட்களுக்கு மேற்பட்ட காலஅவகாசத்தை வழங்கி பத்திரிகை அறிவித்தல் வெளியிட்டதாக அறிவித்துள்ளன. பருத்தித்துறை பிரதேச சபை வழங்குநர்களை பதிவு செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ள போதிலும் அது பற்றி வினவப்பட்ட ஏனைய தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை. இவற்றில் அடுத்த ஆண்டு தொடர்பிலான வழங்குநர்களைப் பதிவு செய்வது சம்பந்தமான பத்திரிகை அறிவித்தல் முன்னைய ஆண்டின் இறுதிப்பகுதியில் வெளியிடப்பட வேண்டுமாயினும் காத்தாங்குடி நகர சபையினால் 2017 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான அறிவித்தல் 2017 சனவரி மாதம் 07 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வழங்குநர்களின் பட்டியல் தொடர்பில் முன்வைத்த கேள்விக்கு 20 நிறுவனங்கள் வழங்குநர்களின் பட்டியலை சமர்ப்பித்துள்ளன. அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கநர்களைப் பதிவு செய்வது தொடர்பில் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக 57 மூ மானோர் மாத்திரம் வழங்குநர்களைப் பதிவு செய்வது சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது என்பதைக் குறிப்பிட முடியும்.

2018 ஆம் ஆண்டுக்கு 26 உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்திருப்பதாகவும் அது தொடர்பிலான உரிய காலஎல்லைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. வழங்குநர்களின் பட்டியலை மாத்திரம் மன்னார் பிரதேச சபை சமர்ப்பித்துள்ளதுடன் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வழங்குநர்களின் பட்டியல் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கேகாலை, பண்டாரவளை, மத்திய நுவர கம்பலாத மற்றும் பலாங்கொடை ஆகிய பிரதேச சபைகள் 2017 ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களைப் பதிவு செய்திருக்கவில்லை எனினும் 2018 ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டு தொடர்பில் சுமார் 74மூ அளவில் வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் பின்பற்றியுள்ள என்பதைக் குறிப்பிட முடியும். சரியான முறையில் அமுல்படுத்தப்படுகின்ற வழங்குநர்களின் பட்டியல் காணப்படுவதன் மூலம் ஊழல் மற்றும் மோசடிக்குள்ள சந்தர்ப்பத்தைக் குறைக்க முடியும்.

2019 ஆம் ஆண்டு தொடர்பில் வழங்குநர்களைப் பதிவு செய்வதை 27 மன்றங்கள் மேற்கொண்டுள்ளதுடன் அறிவித்தல் வெளியிடப்பட்ட காலம் பற்றியும் குறிப்பிட்டுள்ளன. மத்திய நுவர கம்பலாத பிரதேச சபையினால் வடமத்திய மாகாண சபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பட்டியலைப் பயன்படுத்துவதற்கு குழு தீர்மானித்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 29 நிறுவனங்களினால் வழங்குநர்களின் பட்டியல் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய மேலுள்ளவாறு மன்னார் பிரதேச சபையினால் வழங்குநர்களின் பட்டியல் மாத்தரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், பலாங்கொடை பிரதேச சபையின் இணையத்தளத்தில் வழங்குநர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி தகவல்களுக்கு அமைய வழங்குநர்களின் பதிவு தொடர்பில் சுமார் 82 மூ ஆன அளவினரால் பதிலளிக்கப்பட்டுள்ளது. கற்கைக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களை சமர்ப்பித்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையை பின்வருமாறு முன்வைக்க முடியும்.

**வரைபு 03 : வழங்குநர்களைப் பதிவு செய்துள்ள உள்ளூராட்சி மன்றங்கள்**




**மூலம்: கற்கைத் தகவல்கள்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வருடங்களினுள் வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பில் நிறுவனத்தினால் பின்பற்றப்பட்ட சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அது தொடர்பிலான உள்ளகத் தீர்மானங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய ஆவணங்கள் மற்றும் உரிய ஆவணங்ளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு கோரும் வினாக்ளுக்கான விடைகள் பல்வேறு வகையிலானதாக உள்ளதுடன் வினவப்பட்ட சகல தகவல்களையும் சமர்ப்பித்திருப்பது 7 நிறுவனங்கள் மட்டமே ஆகும். சில உள்ளூராட்சி மன்றங்கள் பின்பற்ற வேண்டிய சட்டங்கள் ஒழுங்குவிதிகள் பற்றிக் குறிப்பிட்ட போதிலும், அது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற உள்ளக தீர்மானம் பற்றி சான்றுப்படுத்திய அல்லது சான்றுப்படுத்தாத பிரதிகளை இணைக்கவில்லை.

வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு முன்னர் வழங்குநர்களை மதிப்பீடு செய்தமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஒரு சில பிரதேச சபைகளினால் வழங்குநர்களின் பட்டியல் தொடர்பில் குழு அங்கீகாரம் வழங்கிய உள்ளகத் தீர்மானம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வழங்குநர்களை பதிவு செய்வது பற்றிய விதிவிளக்குகள் அல்லது வழங்குநர்களைப் பதிவு செய்வது பற்றிய விசேட சந்தர்ப்பங்கள் இல்லை என்றும் சட்டங்கள் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் மாத்திரம் வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த வழங்குநர்கள் மற்றும் வெளி பிரதேச வழங்குநர்களும் விலை மனுக்களைச் சமர்ப்பிக்கும் போது, விலை மனுக்களுக்கு இடையில் வித்தியாசம் இல்லாத சந்தர்ப்பங்களில் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக மொனராகலை பிரதேச சபை குறிப்பிட்டுள்ள போதிலும், அது பற்றிய உள்ளக தீர்மானங்களின் எழுத்து மூலமான தகவல்கள் இல்லை. இவ்வாறான விசேடமான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்ற போதிலும் வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் முறையான முறையியல்களைப் பின்பற்றி வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு உகந்த நடவடிக்கைகளை பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொண்டுள்ளன என்பதைக் குறிப்பிட முடியும்.

வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கு அமைய பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் பெறுகை விதிகளைப் பின்பற்றி வழங்குநர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மோசடி அல்லது ஊழல் செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பதற்கான போதியளவு தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் வழங்குநர்களைப் பதிவு செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ள போதிலும் வழங்குநர்களின் பட்டியலின் சான்றுப்படுத்திய பிரதி மற்றும் வழங்குநர்களின்

பதிவு தொடர்பில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் சான்றுப்படுத்திய பிரதி சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ஏதேனும் ஊழல் செயல் இடம்பெற்றுள்ளதா என்பதை குறிப்பாக குறித்துரைப்பதற்கு மேலதிக கற்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனினும் வெளிப்படைத்தன்மை குறைவதானது பொதுவாக ஊழல் மோசடி இடம்பெறுவதற்கு வாய்ப்பளிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோராது கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் தொடர்பாக வினவப்பட்ட போது வழங்கியுள்ள விடையின் தன்மை பலதரப்பட்டதாக உள்ளது. இதற்கு ஏதேனுமொரு தகவலை வழங்கியுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 15 ஆகும். அத்துடன் மேற்படி தகவல் பொருட்கள் மற்றும் சேவை அடிப்படையில் அல்லது ∴ மற்றும் நிதி வரையறைகள் என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கமைய ரூபாய் 15,000.00 இற்கு குறைந்த பெறுமதியைக் கொண்ட பொருட்கள், ரூபாய் 5000.00 இற்கு குறைவான பெறுமதியைக் கொண்ட பொருட்கள் மற்றும் ரூபாய் 500.00 இற்கு குறைவான பெறுமதியைக் கொண்ட பொருட்கள் என்ற வகையில் நிதிசார் வரையறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக எரிபொருள், நியமத் தரத்தைக் கொண்ட பாகங்கள், தோட்ட அழங்கரிப்புக்கான செடிகள் மற்றும் ஏனைய பொருட்கள், ரோட் ரோலர், வேல்டின் வேலைகள், புதுப்பித்தல்கள் மற்றும் பூட்டு போன்றவை விலைமனுக் கோரத் தேவையற்ற பொருட்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த வழங்குநர்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அல்லது அவசர சந்தர்ப்பங்களில் விலை மனுக் கோராது பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகளை நேரடியாக கொள்வனவு செய்யும் வரையறைகள் தொடர்பில் பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 2.12 பிரிவுக்கு அமைய ரூபாய் 5000.00 ஆன வரையறைக்குள் நிறுவனத் தலைவரின் அங்கீகாரத்திற்கு அமைய கொள்வனவு செய்ய முடியும் என்பதுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனப் புதுப்பித்தல் நடவடிக்கைகளும் பல்வேறு விலை வரையறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட முடியும். இதற்கு மேலதிகமாக ஒரு சில பிரதேச சபைகளினால், உள்ளூராட்சி மன்றங்கள் வெளியிடுகின்ற சுற்றறிக்கைகளும், உள்ளகத் தீர்மானங்களும் விதிவிலக்குகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள் சமர்ப்பித்துள்ள தகவல்களுக்கு அமைய 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் பற்றிய தகவல்களை 33 நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ளதுடன், ஒவ்வொரு நிறுவனமும் தொழில்நுட்பக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் செயற்பட வேண்டியதன் அவசியத்தன்மை பற்றிய அறிவைக் கொண்டுள்ளமை உறுதியாகின்றது. எனினும் ஒவ்வொரு நிறுவனமும் உத்தேச 3 வருடங்களுக்கும் தாபித்துள்ள தொழில்நுட்பக் குழுக்கள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை. உள்ளூராட்சி மன்றங்களினால் பிரதானமாக இரண்டு முறையகள் பயன்படுத்தப்பட்டு தொழில்நுட்பக் குழுக்கள் தாபிக்கப்படுகின்றமை தகவல் பகுப்பாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- வருடாந்தம் ஒரு தொழில்நுட்பக் குழுவை மாத்திரம் நியமனம் செய்திருத்தல்
- ஒவ்வொரு பொருள் மற்றும் சேவையையும் கொள்வனவு செய்யும் போதும் நியனம் செய்யப்பட்டும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

மேலும் தொழில்நுட்ப குழுக்களுக்கு அலுவலர்களை நியமனம் செய்யும் போது அவர்களின் திறமை மற்றும் அறிவை அடிப்படையாகக் கொள்வது தொடர்பிலான தகவல்களை சமர்ப்பித்துள்ள நிறுவனங்களினால் மேலதிகமான ஆதாரங்கள் மூலம் அதனை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு போதியளவு விரிவான தகவல்கள் இல்லாமை தரவுப் பகுப்பாய்வுக்குத் தடையாக அமைந்தது. எவ்வாறாயினும் சம்பித்துள்ள தகவல்களுக்கு அமைய தொழில்நுட்பக் குழுக்களைத் தாபிப்பதன் அவசியத்தன்மை மற்றும் நியமனம் செய்ய வேண்டிய அலுலவர்களின் திறமை தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் ஒப்பீட்டு ரீதியில் அறிவைக் கொண்டுள்ளன என்பதைக் குறிப்பிட முடியும்.

விசேட சந்தர்ப்பமொன்றாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பெயர்கள் மற்றும் பதவிகள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதில் குறிப்பாக ஆண்டு குறிப்பிடப்படவில்லை. குறித்த ஆண்டுக்குள் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை ஒப்பிடும் போது நியமனம் செய்யப்பட்ட தொழில்நுட்ப குழு உறுப்பினர்கள் எந்தளவுக்கு தொழில்சார் நிபுணத்துவத்தைக் கொண்ட அலுவலர்கள் என்பதை உறுதி செய்துகொள்ள முடியவில்லை. இப்பிரதேச சபையினால் 2019 ஆம் ஆண்டில் ஒரு வாகனம் கொள்வனவு செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களை உறுதி செய்துகொள்வதற்கு தகவல்கள் போதியளவில் இல்லை.

உள்ளகக் கணக்காய்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய 24 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளகக் கணக்காய்வு அலுவலர்களை நியமனம் செய்வதற்கும், 4 நிறுவனங்கள் மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. இந்த அலுவலர்கள் எந்த ஆண்டுக்கு நியமனம் செய்யப்பட்ட அலுலவர்கள் என்பதை பெரும்பாலான மன்றங்கள் குறிப்பிட்டிருக்கவில்லை. மேலும் இவ்வாறு நியனம்

செய்யப்பட்ட அலுவலர்கள் முகாமைத்துவ உதவிச் சேவை அல்லது அபிவிருத்தி அலுவலர் சேவையைச் சேர்ந்த அலுலவர்களாவர். 13 நிறுவனங்களினால் 2017 ஆம் ஆண்டுக்கு உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டுக்கு 10 நிறுவனங்களும் 2019 ஆம் ஆண்டுக்கு 1 நிறுவனமும் அறிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன், உள்ளகக் கணக்காய்வு அலுலவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருப்பினும் ஒரு வருடத்திற்கேனும் குறித்த கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத 6 நிறுவனங்களும் கணக்காய்வு அலுவலரும், கணக்காய்வு அறிக்கைகளும் இல்லாத 7 நிறுவனங்களும் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன.

பின்வரும் நிறுவனங்கள் கணக்காய்வு தொடர்பிலான உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவரை நியமனம் செய்துள்ள போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**அட்டவணை 01 : உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருப்பினும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத உள்ளூராட்சி மன்றங்கள்.**

| உள்ளூராட்சி மன்றம் | கணக்காய்வுக் குழுக்களைத் தாபித்தல் / கணக்காய்வு அலுவலரை நியமனம் செய்தல் 2017/2018/2019 |
|---|---|
| காத்தான்குடி | √ |
| சாவகச்சேரி | √ |
| பருத்தித்துறை | √ |
| மதுகம | √ |
| கொலன்னாவை | √ |
| கண்டி மாநகர சபை | √ |

**மூலம்: கற்கையின் தகவல்கள்**

உள்ளூராட்சி மன்றங்களினால் உள்ளகக் கணக்காய்வு மாதாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலான உள்ளகக் கணக்காய்வுகள் பெறுகை முறையியல் தொடர்பிலான கணக்காய்வுகளை மேற்கொண்டிருக்காத அல்லது தகவல்களை சமர்ப்பிக்காதையாக உள்ளன. வெளிக் கணக்காய்வின் போதும் பெறுகை தொடர்பில் கவனம் செலுத்தியிருப்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவாகும். வெளிக் கணக்காய்வு வினாக்களில் பொதுவாக வலியுறுத்தியிருப்பது உள்ளூராட்சி மன்றங்கள் பெறுகைத் திட்டமொன்றைத் தயார் செய்யாமையாகும். எனினும் இந்த நிறுவனங்களிடம் வினவிய தகவல்களுக்கு அமைய பெறுகையில் காணப்படுகின்ற குறைபாடுகள் அதிகமாகும். எனவே, உள்ளக அல்லது வெளிப்புற ரீதியாக பூரணமான கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதில்லை என்பது தகவல்களுக்கு அமைய தெரியவருகின்றது. இது பற்றி விரிவான தகவல்கள் கணக்காய்வு அத்தியாயத்தில் மேலும் வலியுறுத்தப்படும். உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவரை நியமனம் செய்யாமைக்கான காரணங்களாக மொனராகலை பி.ச. குறிப்பிட்டிருப்பது அலுலவர்கள் இல்லை என்றாகும். உள்ளக அல்லது வெளிப்புற கணக்காய்வுச் செயன்முறைக்கு இந் நிறுவனங்கள் உட்படுத்தப்படாமை ஊழல், மோசடி இடம் பெற வழிவகுக்கின்றது. மேலும் கணக்காய்வுத் திட்டமொன்று இல்லாமை பாரிய குறைபாடொன்றாக இருப்பதுடன், அந்நிறுவனங்களின் முறையியல்கள் அடிக்கடி மாற்றமடைகின்ற மற்றும் பக்கச்சார்பான முறையியல்களாக இருக்க முடியும்.

2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உள்ளூராட்சி மன்றங்களினால் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வது தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் 25 நிறுவனங்கள் இப் பொருட்களில் ஒன்று அல்லது பலவற்றைக் கொள்வனவு செய்துள்ளன. அது தொடர்பில் 10 நிறுவனங்கள் பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதெச சபையினால் மூன்று வருடங்களிலும் மின்பிறப்பாக்கி இயந்திரம், நகல் இயந்திரம் மற்றும் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரோட் ரோலர் இயந்திரம் மற்றும் கம்பெக்டர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டள்ளதுடன், நகல் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பது 2019 ஆம் ஆண்டில் மாத்திரமாகும். ஒரு வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பாக்கி இயன்திரத்தின் விலை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனம் பற்றி மாத்திரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எழுதுகருவிகள் கொள்வனவு செய்த நிறுவனங்கள் சில தவிர ஒவ்வொரு நிறுவனத்திலும் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தகவல்கள் சமர்ப்பித்துள்ள நிறுவனங்களின் அடிப்படையில் சகல நிறுவனங்களும் குறைந்த விலையை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுகளை மேற்கொண்டுள்ளன.

பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பிலான கேள்விக்கு விரிவான தகவல்களைச் சமர்ப்பிப்பது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் வெளிப்படுத்தியிருப்பது மிகவும் குறைந்தவிலான விடைகளையாகும். இது கற்கையின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் விசேடமானதாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளூராட்சி மன்றங்களினால் ஆரம்ப சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி சகல சந்தர்ப்பங்களும் நடைமுறையில் அமுல்படுத்தப்படுவது தொடர்பில் வினவும் போது

சமா்ப்பித்துள்ள விடைகள் பற்றி திருப்தியடைய முடியாது. எனவே பொதுவாக நோக்கும் போது கொள்வனவுகள் தொடா்பில் வழங்கியுள்ள விடைகள் 25-30 மூ இடையே வரையறுக்கப்படுவதாக பருமட்டாக அளவிட முடியும்.

இக் கண்டுபிடிப்புக்களை கற்கையின் நோக்கங்களுடன் ஒப்பிடுகின்ற போது கற்கைக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் பதிலளித்துள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பாலானவை பெறுகையின் ஆரம்ப நடவடிக்கைகளைப் பின்பற்றிவருவதாக குறிப்பிட முடியுமாயினும் அதனை அமுல்படுத்தும் போது ஏதேனும் இடைவெளி காணப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்கு போதியளவு தகவல்களை சமா்ப்பித்திருக்கவில்லை.

# 4. வழங்குநர்களைப் பதிவு செய்யும் முறையியல்

### 4.1 வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2017/2018/2019

வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களினால் பின்பற்றப்பட வேண்டிய முறையில் தொடர்பில் தேசிய பெறுகை முகவராண்மை நிறுவனத்தின் தலைவர் ∴பிரதம நிறைவேற்று அலுவலரின் தே.பெ.மு. சுற்றறிக்கை இலக்கம் 09 மற்றும் 2006 மார்ச் மாதம் 03 ஆம் திகதிய சுற்றறிக்கை மூலம் தத்துவமுள்ளதாக்கப்பட்டுள்ள 2006 பொருட்கள் மற்றும் வேலைகள் பற்றிய பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 3.4.3 (ஆ) முதல் (ஈ) வரையான இலங்கங்களின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட சகல அரச நிறுவனங்களினாலும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் மற்றும் வழங்குநர்களின் பட்டியலை இற்றைப்படுத்துவது தொடர்பான ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் 3.4.3 (அ) பிரிவுக்கு அமைய அறிவித்தலை வெளியிடுவது பாதகமான அல்லது குறைந்த பெறுமதியைக் கொண்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவின் போது அல்லது அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற விடயங்களைக் கொள்வனவு செய்வதற்கு இவ்வாறு வழங்குநர்களைப் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன் வழங்குநர்களைப் பதிவு செய்ய வேண்டிய இரண்டு முறைகள் பற்றி 3.4.2 (இ)ஐ மற்றும் ஐஐ ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கமைய அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் எழுதுகருவிகள், மின் பொருட்கள், மோட்டார் வாகனம் புதுப்பித்தல், வார சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகள் போன்ற விசேட பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யக்கூடிய வழங்குநர்களின் பட்டியலைத் தயார் செய்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ் வழங்குநர்களின் பட்டியல் தொடர்பில் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது குழுவின் அங்கீகாரம் இருத்தல் வேண்டும். 3.4.2 (ஈ) இற்கு அமைய இவ்வாறான விடயங்களைக் கொள்வனவு செய்ய முடிவது இவ்வாறு பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து மாத்திரமாகும்.

கற்கையின் தகவல்களுக்கு அமைய 2017 ஆம் ஆண்டு தொடர்பாக 22 உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அது தொடர்பிலான அறிவித்தல்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் பெற்றுத்தரப்பட்டுள்ளன. எனினும் ஒரு நிறுவனம் வழங்குநர்களைப் பதிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள போதிலும் அது தொடர்பான சான்றுப்படுத்திய பிரதிகளை இணைத்திருக்கவில்லை. மேலும் பின்வரும் 12 உள்ளூராட்சி மன்றங்களும் வழங்குநர்களை பதிவு செய்திருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளன. வவுனியா பிரதேச சபை தகவல்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

**அட்டவணை 2: 2017 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்யாத நிறுவனங்கள்**

| தொடர் இல. | மாநகர சபை/நகர சபை/பிரதேச சபை |
|---|---|
| 01 | மாந்தை கிழக்கு பிரதேச சபை |
| 02 | மாந்தை மேற்கு பிரதேச சபை |
| 03 | மன்னார் பிரதேச சபை |
| 04 | புதுக்குடியிருப்பு பிரதேச சபை |
| 05 | பிபிலை பிரதேச சபை |
| 06 | கேகாலை நகர சபை |
| 07 | பொலன்னறுவை மாநகர சபை |
| 08 | பண்டாரவளை பிரதேச சபை |
| 09 | அம்பாறை நகர சபை |
| 10 | வனாதவில்லு பிரதேச சபை |
| 11 | தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை |
| 12 | மத்திய நுவர கம்பலாத பிரதேச சபை |
| 13 | பலாங்கொடை நகர சபை |

**மூலம்: வெளிக்கள ஆய்வு**

2017 ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பிலான அறிவித்தலை 2016 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டில் வெளியீடு செய்த காத்தான்குடி நகர சபையினால் வழங்குநர்களைப் பதிவு செய்வது பற்றிய பத்திரிகை அறிவித்தல் 2017.01.09 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. பதிவுசெய்த வழங்குநர்களின் பட்டியலை சமர்ப்பிப்பது தொடர்பில் காத்தான்குடி நகர சபை மற்றும் அநுராதபுரம் மாநகர சபையினால் பூரணமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. பருத்தித்துறை பிரதேச சபையினால் வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான வழங்குநர்களின் ஆவணம் சமர்ப்பிக்கப்படவில்லை.

2018 ஆம் ஆண்டில் 26 உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குநர்களை பத்திரிகை அறிவித்தல் மூலம் 2017 இன் 4 ஆவது காலாண்டில் பதிவு செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக ஆவணங்களின் பிரதிகளுடன் உறுதிசெய்துள்ளன. பின்வரும் 08 நிறுவனங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளதுடன் காத்தான்குடி நகர சபையின் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பருத்தித்துறை பிரதேச சபையினால் வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ள போதிலும் குறித்த வழங்குநர்களின் பெயர்ப் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை.

**அட்டவணை 3: 2018 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்யாத நிறுவனங்கள்**

| தொடர் இல. | மாநகர சபை/நகர சபை/பிரதேச சபை |
|---|---|
| 01 | மாந்தை கிழக்கு பிரதேச சபை |
| 02 | மாந்தை மேற்கு பிரதேச சபை |
| 03 | மன்னார் பிரதேச சபை |
| 04 | புதுக்குடியிருப்பு பிரதேச சபை |
| 05 | பிபிலை பிரதேச சபை |
| 06 | பொலன்னறுவை மாநகர சபை |
| 07 | அம்பாறை நகர சபை |
| 08 | வுனாதத்வில்லு பிரதேச சபை |
| 09 | தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை |

**மூலம் : கற்கையின் தகவல்கள்**

2019 ஆம் ஆண்டில் 27 உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்துள்ளதுடன் 07 நிறுவனங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்யவில்லை என்ற தகவல்களை சமர்ப்பித்துள்ளன. வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பில் பின்வரும் உள்ளூராட்சி மன்றங்கள் கற்கைக்குரிய 03 வருடங்களிலும் ஏற்பாடுகளை பின்பற்றியிருக்கவில்லை.

**அட்டவணை 4: ஒரு வருடத்திற்கேனும் வழங்குநர்களைப் பதிவு செய்யாத நிறுவனங்கள்**

| தொடர் இல. | மாநகர சபை/நகர சபை/பிரதேச சபை |
|---|---|
| 01 | மாந்தை மேற்கு பிரதேச சபை |
| 02 | மன்னார் பிரதேச சபை |
| 03 | பிபிலை பிரதேச சபை |
| 04 | பொலன்னறுவை மாநகர சபை |
| 05 | அம்பாறை நகர சபை |
| 06 | வுனாத்தவில்லு பிரதேச சபை |
| 07 | தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை |

**மூலம் : கற்கையின் தகவல்கள்**

## 4.2 வழிகாட்டல் தொகுப்புக்கு இசைவாக செயற்படல்

உள்ளூராட்சி மன்றங்களில் வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பிலான வெளியீடுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக பின்வரும் தகவல்களை எழுத்துமூலம் சமர்ப்பிக்க வேண்டியதன் தேவைப்பாடு கேள்விக் கொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது பற்றிய பூரணமான தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

- வழங்குநர்களைப் பதிவு செய்வது பற்றிய பத்திரிகை அறிவித்தல்
- வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள காலஎல்லை
- வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காகப் பின்பற்றப்பட்ட சட்டங்கள், வழிகாட்டல்கள் மற்றும் உள்ளகத் தீர்மானங்கள்

கற்கையின் தகவல்களுக்கு அமைய பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் (2006) 3.4.2 (இ) ஐ மற்றும் ஐஐ ஆகிய பிரிவுகளுக்கு அமைய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக பிரதிகள் சகிதம் சமர்ப்பித்துள்ள உள்ளூராட்சி மன்றங்களின் விகிதம் 86மு ஆகும். எவ்வாறாயினும் பூரணமான தகவல்களைச் சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் தொடர்பில் ஊழல் அபாயம் காணப்படுவதாக வெளிப்படுத்தப்படுவதில்லை. எனினும் தகவல்களைச் சமர்ப்பிக்காத நிறுவனங்கள் தொடர்பில் விசேடமாக கவனம் செலுத்தி காத்திரமான முறையில் பதிலளிக்காமையில் ஊழல் அபாயம் இருக்கக்கூடும் என்று குறிப்பிட முடியும். இதனை மென்மேலும் உறுதி செய்கின்ற சந்தர்ப்பமாக ஒரு சில நிறுவனங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள போதிலும் அதன் சான்றுப்படுத்திய பிரதிகளை சமர்ப்பிக்காததைக் குறிப்பிட முடியும்.

## 4.3 உள்ளகத் தீர்மானம் மேற்கொள்ளல்

கற்கை ஆராய்ச்சிக்கு உட்படுத்திய உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கிடைத்துள்ள தகவல்களுக்கு அமைய ஒரு சில உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக வேறு சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு வழங்குநர்கள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக வெலிகம நகர சபை சமர்ப்பித்துள்ள அந்நகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக 2019.02.12 ஆம் திகதி நடாத்தப்பட்ட மாதாந்தக் கூட்டத்தின் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களைப் பதிவு செய்வது 2017.01.19 ஆம் திகதி நடைபெற்ற நிதிக் குழுவின் தீர்மானத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெஹிஅத்தகன்டிய பிரதேச சபை, வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பாக முறையான முறையியலை பின்பற்றியுள்ளதற்கான போதியளவு சான்றுகள் இல்லை என்பதுடன் 2006 இன் பெறுகைக் கையேடு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.05.09 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி, PT/4/2017-2017.09.21 ஆம் திகதிய மாகாண சபை திறைசேரி சுற்றறிக்கை மற்றும் சபைத் தீர்மானங்களின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதை ஏற்றுக் கொள்ளத்தக்க எழுத்துமூலமான சான்றுகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

மத்திய நுவர கம்பலாத பிரதேச சபையினால் வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பாக நிறுவன ரீதியான அறிவித்தலொன்றை வெளியிடுவதன் மூலம் பொதுவான முறையியல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வட மாகாண சபையினால் பதிவு செய்யப்பட்ட பெயர்ப் பட்டியல் பெறுகைகளுக்குப் பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அது பற்றிய உள்ளகத் தீர்மானம் மேற்கொண்டமைக்கான எழுத்துமூலமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், உள்ளக தீர்மானம் மேற்கொள்வது வழங்குநர்களை பதிவு செய்ய அறிவித்தல் பிரசுரிப்பது முதல் தெரிவு செய்துகொள்ளும் வழங்குநர்களின் பட்டியல் வரை அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் அல்லது அதிகார அமைப்பிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு மேற்கொள்ளப்படும் உள்ளகத் தீர்மானம் பற்றிய தகவல்கள் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே உள்ளூராட்சி மன்றத்தினால் வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள போதும் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு இசைவாக வழங்குநர்களை பதிவு செய்துகொண்டிருப்பதாக உறுதி செய்ய முடியாது. 2017 ஆம் ஆண்டுக்கு அமைய அவ்வாறான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தள்ள உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 03 ஆகும் என்பதுடன் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களினால் தகவல் அறியும் சட்டத்திற்கு அமைய கோரப்பட்ட தகவல்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

உள்ளக தீர்மானம் தொடர்பிலான தகவல்கள் இல்லாமை மூலம் தெரியவருவது மேற்படி தீர்மானம் முறையான முறையியலுக்கு முரணாக மேற்கொள்ளப்ட்டிருப்பதாக அல்லது அவற்றைப் பதிவு செய்துகொள்வது முக்கியமற்றதாக நிறுவனம் கருதுகின்றது என்றாகும். மேற்படி காரணங்களில் எந்தக் காரணமாயினும் இந்தத் தீர்மானம் பற்றிய வெளிப்படைத்தன்மையை அளவிடுவது தவறவிடப்படப்படக் காரணமாகின்றது. இதுவும் ஊழல் ஏற்படுவதற்கான சந்தர்ப்பமொன்றாக இனங்காணப்பட முடியும்.

# 5. விலைமனுக் கோரல் மற்றும் சமர்ப்பித்தல்

பொது நிறுவனங்களினால் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக விலை மனுக்கோரப்பட வேண்டும் என்பதுடன் அதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.2 இன் கீழ் மற்றும் பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 5 ஆம் 6 ஆம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்குத் தேவையான சகல பெறுகை ஆவணங்களினதும் மாதிரியமைப்புக்கள் பெறுகைக் கையேட்டில் தரப்பட்டுள்ளன.

பெறுகை வழிகாட்டலின் 3.1இ3.2இ 3.3 மற்றும் 3.4 .2 இற்கமைய ஏதேனுமொரு பொது நிறுவனம் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது பின்வரும் ஒரு முறையியலுக்கு உட்பட்டு கொள்வனவு செய்தல் வேண்டும். இது பற்றிய விரிவான வரிசைப்படுத்தல் பெறுகை நடவடிக்கைத் தொகுப்பின் 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- சர்வதேச போட்டித்தன்மைமிக்க விலை மனுக் கோரல்
- உள்நாட்டுப் போட்டித்தன்மைமிக்க விலை மனுக்கோரல்
- மட்டுப்படுத்தப்பட்ட விலைமனுக் கோரல்
- சர்வதேச மற்றும் தேசிய சந்தையில் விலைகளை ஒப்பிடும் முறை
- நேரடி ஒப்பந்தம் மற்றும் தமது ஊழியர்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி வேலைகளை மேற்கொள்ளல்.

போட்டித்தன்மைமிக்க விலை மனுக்கோரல் தொடர்பாக அறிவித்தலை வெளியிடுவது அவசியப்படும் பட்சத்தில் ஆகக் குறைந்தது கூடுதல் விற்பனையைக் கொண்ட தேசிய பத்திரிகையொன்றில் அல்லது பெறுகை முகவராண்மை நிறுவனத்தின் இணையத்தளத்திலும் வேறு சம்பந்தப்பட்ட இணையத்தளங்களிலும் அறிவித்தல்களை வெளியிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக பெறுகைக்காக பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குநர்களிலிலிருந்து அல்லது இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் மஞ்சல் நிற அல்லது வானவில் நிற தொலைபேசி விபரக்கொத்தில் பட்டியலிடப்பட்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோர முடியும். வேலைகள் தொடர்பில் விலை மனுக் கோரும் போது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலை மனுக் கோர வேண்டும். மேலும் விலை மனுக்களை கையளிப்பதற்கான தகுந்த அவதானிப்புக்கள் தொடர்பிலான அறிவுரைகள் பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 5.3.4 மற்றும் 5.3.5 ஆகிய பிரிவுகளில் உள்ளடங்குகின்றன.

மேலும் பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 2.14 இற்கு அமைய போட்டித்தன்மை மிக்க விலை மனுக்கோரல் சிக்கனமற்றதாக உள்ள பட்சத்தில் சந்தையின் விலையுடன் ஒப்பிடும் முறையின் கீழ் நேரடியாக கொள்வனவு செய்யக்கூடியதாக (சிறிய பெறுமதிகளைக் கொண்ட புதுப்பித்தல் வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகள்) உள்ளதுடன் அதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் நிதிசார் வரையறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படல் வெண்டும் என்று 3.1 (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அவசர சந்தர்ப்பங்களில் விலை வரையறைகளுக்கு உட்பட்டு விசேட ஏற்பாடுகளின் கீழ் கொள்வனவு செய்ய முடியும்.

கற்கைத் தகவல்களுக்கு அமைய விலை மனுக்களைக் கோருவது அவசியமில்லாத கொள்வனவுகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் 14 இனால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், மேற்படி கொள்வனவுக்கு ஏற்புடையதாகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது 4 நிறுவனங்களினால் மாத்திரமாகும். பின்வரும் வரையறைகளுக்குள் விலை மனுக் கோரல் இன்றி பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் உள்ள சந்தர்ப்பங்கள் பற்றி உள்ளூராட்சி மன்றங்களினால் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கொள்வனவு செய்யக்கூடிய விடயங்கள் மற்றும் அதன் தன்மை பற்றி 12 நிறுவனங்கள் தகவல்களை சமர்ப்பித்துள்ளதுடன் அவற்றில் 2 நிறுவனங்கள் மாத்திரம் ரூபா 15,000.00 இற்கு குறைவான பெறுமதியைக் கொண்ட பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு விலை மனுக் கோரல் அவசியமில்லை என்று குறிப்பிட்டுள்ளதுடன், ஒரு நிறுவனத்திற்கு அமைய ரூபா 5,000.00 இற்கு குறைவான விடயடங்களுக்கும் மற்றொரு நிறுவனத்தினால் ரூபா 500.00 இலும் குறைவான விலையைக் கொண்ட விடயங்களுக்கும் விலை மனுக் கோராது பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளும் போது பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வது இடம்பெறுவதும் தெரியவருகின்றது.

கற்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விடைகளுக்கு அமைய விலை மனுக் கோருவது சம்பந்தமான சகல கேள்விகளுக்கும் விடையளித்திருப்பது 25 மன்றங்கள் மாத்திரமாகும். 12 நிறுவனங்கள் இது தொடர்பிலான தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை. பதிலளித்துள்ள நிறுவனங்கள் 25 இல் எழுத்து மூலமான ஆவணங்களுடன் இலக்குத் தகவல்களை சமர்ப்பித்திருப்பது 9 நிறுவனங்கள் மாத்திரமாகும்.

## பிரதான அவதானிப்புக்கள்

பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி பற்றி தகவல்களுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தெரியவந்துள்ளன.

- பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வது தொடர்பில் விலை மனுக் கோருவதன் அவசியத்தன்மை பல்வேறு நிதிசார் கட்டுப்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும்.
- வழங்குநர்களின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக் கோராது கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பட்டியல் நிறுவனங்களினால் (ஒரு சில நிறுவனங்கள் தவிர) பேணிவரப்படுவதில்லை.
- அவ்வாறான கொள்வனவுகள் தொடர்பில் நிறுவனங்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய சரியான அடிப்படையயை ஒருசில நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ளமை.

பெறுகை செயன்முறை சகல அரச நிறுவனங்களுக்கும் ஏற்புடையதானதாகும் என்பதுடன், சகல அரச நிறுவனங்களும் பின்பற்ற வேண்டுமாயினும் அது சரியான முறையில் இடம் பெறாமை ஊழலுக்கு வழிவகுப்பதாக இனங்காணப்பட முடியும்.

# 6. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள்

உள்ளூராட்சி மன்றங்களினால் 2017.்.18 மற்றும் 19 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் தொடர்பில் பின்பற்றப்பட்ட பெறுகை முறையியல் பற்றி ஆராயப்பட்டது.

I. ரோட் ரோலர்.
II. கொம்பெக்ட் இயந்திரம்
III. வாகனம்
IV. நகல் இயந்திரம்
V. மின் பிறப்பாக்கி இயந்திரம்
VI. பிரதிபண்ணி ்.அச்சுக் கடதாசி
VII. இன்க் கார்ட்ரிஜ்
VIII. பேனை
IX. ஆவணக் கோப்பு
X. கடித உறை

இந்தப் பொருட்கள் தொடர்பில் பெறுகை வழிகாட்டல் தொகுப்புக்கு அமைய கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சம்பந்தமான வெளிப்படைத்தன்மை மற்றும் அதன் மூலம் நிறுவன ரீதியாக பெற்றுக் கொண்டுள்ள பயன்களை இனங்காண்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

### 6.1 சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றல்

மேற்படி பொருட்கள் தொடர்பில் எந்தவொன்றும் திடீர் அனர்த்த நிகழ்வுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அடிக்கடி நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் கூடுதல் செலவினத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் காட்டப்பட்டுள்ளன. 7 நிறுவனங்கள் தவிர ஏனைய சகல நிறுவனங்களினாலும் மேற்படி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பொருள் அல்லது சில கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக எழுதுகருவிகள் அதில் பிரதானமானவையாகும். இந்த சகல பொருட்களினதும் கொள்வனவுக்கு ஒவ்வொரு நிறுவனமும் அறிவித்தல்களை வெளியிட்டு விலைமனுக்களை கோர வேண்டுமாயினும் அறிவித்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் சான்றுப்படுத்திய பிரதிகள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. சில பிரதெச சபைகளினால் வழங்குநர்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் அதனை உறுதி செய்து விலை மனுக்கோரலுக்காக அனுப்பிய கடிதங்கள் அல்லது அறிவித்தமையை உறுதி செய்வதற்கான ஆவணங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

விலைகளை ஒப்பிடல் மற்றும் ஆகக் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் விலைகளை ஒப்பிடுவதற்கு ஒவ்வொரு விலை மனுதாரரும் சமர்ப்பித்துள்ள விலைமனுக்களின் பிரதிகள் அல்லது ஆகக் குறைந்தது ஒவ்வொரு விலைமனுதாரரும் சமர்ப்பித்துள்ள அலகுகளின் விலைகளைக் குறிப்பிட்டிருப்பது ஒரு சில நிறுவனங்கள் மாத்திரமாகும். எனவே விலைகளை ஒப்பிடுவதை எந்தளவு தூரத்திற்கு பின்பற்றியுள்ளார்கள் என்பதை ஆராய முடியாது.

இவ்வாறான தகவல்கள் இல்லாமை அத்தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் சரியான தன்மை பற்றிய சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊழல் அபாயம் ஏற்பட முடியும்.

### வாகனம் கொள்வனவு

2017,18 மற்றும் 19 ஆகிய ஆண்டுகளில் வாகனம் கொள்வனவு செய்திருப்பதாக பின்வரும் நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. வாகனம் கொள்வனவு செய்வது தொடர்பில் விலை மனுக் கோருவது அத்தியாவசியமாகும். அது பற்றி ஆராயும் போது குறிப்பாக வாகனம் கொள்வனவு செய்துள்ள நிறுவனங்கள் பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

**அட்டவணை 05 : 2017/18/19 ஆகிய ஆண்டுகளில் வாகனம் கொள்வனவு செய்ததாக தகவல்களைக் குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள்**

| உள்ளூராட்சி மன்றம் | வாகனம் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 |
| புத்தளம் நகர சபை | √ | √ | - |
| மாந்தை மேற்கு | √ | √ | √ |
| பண்டாரவளை | √ | √ | √ |
| காத்தான்குடி | √ | √ | √ |
| கண்டி | √ | √ | √ |
| சாவக்கச்சேரி | √ | √ | - |
| மஹியங்கனை | √ | √ | √ |
| மத்துகம | √ | - | √ |

**மூலம்: கற்கையின் தகவல்கள்**

இந்த வாகனம் கொள்வனவு செய்தமை தொடர்பில் கண்டி மாநகர சபையினால் 2019 ஆம் ஆண்டு கொள்வனவு செய்துள்ள முச்சக்கர வண்டி மற்றும் சிறிய மோட்டார் வாகனத்தை தெரிவு செய்தல் மற்றும் அங்கீகரித்தமை தொடர்பில் கேள்விக் குழுவின் சிபாரிசு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பில் விலை மனுக்கோரல் சம்பந்தமாக உரிய வழங்குநர்களுக்கு அனுப்பிய வகைப்படுத்தல்களைக் கொண்ட கடிதம் அல்லது அறிவித்தலின் பிரதி மற்றும் விலையைக் குறிப்பிட்டு வழங்குநர் சமர்ப்பித்த விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய நிறுவனங்களினால் இது தொடர்பில் எந்தவொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

## மின்பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு

மின்பிறப்பாக்கி இயந்திரம் (Generator) கொள்வனவு செய்துள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான பட்டியல் கீழே தரப்பட்டுள்ளன. இதில் 10 நிறுவனங்கள் மின் பிறப்பாக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்துள்ள போதிலும் தகவல்களை சமர்ப்பித்திருப்பது மாந்தை மேற்கு, பலாங்கொடை மற்றும் காத்தான்குடி ஆகிய உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரமாகும். அதற்கமைய அதிகூடிய விலைக்கு மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றை கொள்வனவு செய்திருப்பது சாவக்கச்சேரி நகர சபையாகும். அத்துடன் அது ரூபாய் 2இ292இ150.00 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்வனவு தொடர்பிலான வகைப்படுத்தல்களைக் கொண்ட பத்திரிகை அறிவித்தல் மற்றும் விலைகளை பெறுகைக் குழு தீர்மானித்தமை தொடர்பில் போதியளவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
மாந்தை மேற்கு பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் விலை ரூபாய் 1இ804இ580.00 ஆகும் என்பதுடன் பலாங்கொடை பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் விலை ரூபாய் 1இ167இ135.00 ஆகும். இந்த நிறுவனங்கள் மூன்றும் மாத்திரம் விலைகளைக் குறிப்பிட்டுள்ள போதிலும் இந்தக் கொள்வனவுகள் தொடர்பில் பின்பற்றியுள்ள ஆரம்ப பெறுகை முறை அதன் கோட்பாடுகளை எந்தளவுக்கு பின்பற்றியுள்ளது என்பது பற்றிய போதியளவிலான மற்றும் தரமான கற்கையை மேற்கொள்வதற்குப் போதுமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் கொள்வனவு தொடர்பில் கனிசமானளவு வித்தியாசம் காணப்படுவதுடன், பொருட்களின் வகைப்படுத்தல்கள் மற்றும் மேற்படி வகைப்படுத்தல்கள் தொடர்பிலான தொழில்நுட்பக் குழுவின் சிபாரிசுகளை ஆராய்வது அவசியமாகும். எவ்வாறாயினும் இந்தக் கொள்வனவு தொடர்பிலான ஆண்டுக்குரிய கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை காரணமாக மேற்படி கொள்வனவுகளின் ஏற்புடையதானதன்மை அல்லது ஊழல் செலவினம் பற்றி ஆராய முடியாது.

**அட்டவணை 06 : மின் பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்ததாக தகவல்களை சமர்ப்பித்துள்ள மன்றங்கள்**

| உள்ளூராட்சி மன்றம் | மின் பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்த ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 |
| மாந்தை மேற்கு பிரதேச சபை | √ | √ | √ |
| மன்னார் பிரதேச சபை | - | √ | - |
| புதுக்குடியிருப்பு பிரதேச சபை | - | √ | - |
| பலாங்கொடை பிரதேச சபை | √ | √ | √ |
| காத்தான்குடி நகர சபை | √ | √ | √ |
| பருத்தித்துறை பிரதேச சபை | √ | √ | √ |
| மத்துகம பிரதேச சபை | - | √ | √ |
| மெதகம பிரதேச சபை | - | √ | - |
| கொலன்னாவ நகர சபை | | √ | |
| சாவகச்சேரி பிரதேச சபை | √ | √ | √ |
| மொனராகலை பிரதேச சபை | - | - | √ |

**மூலம்: கற்கையின் தகவல்கள்**

## எழுதுகருவிகள் (கடித உறை, பேனை, பிரதிபண்ணி கடதாசி, ஆவணக்கோப்புக்கள், அச்சிடப்பட்ட தாள்கள்)

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தகவல்களை சமர்ப்பிக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களில் 19 உள்ளூராட்சி மன்றங்கள் 3 வருடங்களிலும் எழுதுகருவிகளைக் கொள்வனவ செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளன. மன்னார் நகர சபை 2019 ஆம் ஆண்டுக்கு எந்தவொரு பொருளையும் கொள்வனவு செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. வெலிகம நகர சபை 2017 ஆம் ஆண்டுக்கான கொள்வனவுகள் பற்றிய தகவல்களை வழங்கியிருக்கவில்லை என்பதுடன் 2019 ஆம் ஆண்டில் எழுதுகருவிகள் கொள்வனவு செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் எழுதுகருவிகள் கொள்வனவு தொடர்பான எந்தவொரு தகவலும் சமர்ப்பிக்காத நிறுவனங்களின் எண்ணிக்கை 11 ஆகும். 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 9 நிறுவனங்கள் எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பிலான தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை.

ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய சில உள்ளூராட்சி மன்றங்களினால் நிறுவன வழங்குநர்களின் பட்டியலுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட விலைமனுக்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் மேற்படி கொள்வனவுகள் தொடர்பில் இறுதி முடிவு அல்லது கொள்வனவு செய்யப்பட்ட

பொருட்கள் எந்த அளவு எந்த விலையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது என்ற தகவல்கள் உள்ளடங்குவதில்லை.

எவ்வாறாயினும் எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களினால் ஆகக் குறைந்த விலையை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட முடியும். மேலும் இந்தக் கொள்வனவுகள் தொடர்பில் தனித்தனியாக நிறுவனங்களினால் தாங்கிக் கொள்ளப்பட்ட செலவினம் பற்றி பகுப்பாய்வு செய்வதற்குப் போதியளவு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

கற்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு தொடர்பாக ஒட்டுமொத்த பெறுகை முறையியல் பற்றி ஆராயும் போது ஆகக் குறைந்த விலையின் கீழ் கொள்வனவை மேற்கொண்ட நிறுவனங்களினால் சகல தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் (உதாரணமாக அம்பாறை நகர சபை) மட்டுப்படுத்தப்பட்ட விலை மனுக்கோரல் அல்லது பத்திரிகை அறிவித்தல் மூலம் விலை மனுக் கோரப்பட்டிருப்பதாகவும் தொழில்நுட்ப குழுவின் சிபாரிசுகள் மற்றும் நிதிக் குழுவின் சிபாரிசுகளையும் பெற்றுக் கொண்டு பெறுகை முறையியல் பின்பற்றப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட முடியும். எவ்வாறாயினும் இதன் போது அவதானிப்புச் செய்யப்பட்ட தகவல்களுக்கு அமைய பெயரிடப்பட்ட ஒவ்வொரு பொருள் தொடர்பிலும் பூரணமான தகவல்களை சமர்ப்பிக்க நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி மன்றங்களினால் சகல பெறுகை படிமுறைகளும் பின்பற்றப்படுதை உறுதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் அதனை நடைமுறையில் உறுதி செய்வதற்குள்ள இச் சந்தர்ப்பத்தில் உரிய பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளது. எனவே தகவல்களை வெளிப்படுத்தாமையில் ஊழல் அபாயம் காணப்படுகின்றது என்று குறிப்பிட முடியும். சில சந்தர்ப்பங்களில் பொருட்களை கொள்வனவு செய்த இறுதித் தீர்மானம் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அமுல்படுத்தும் படிமுறைகள் பற்றிய சான்றுப்படுத்திய எழுத்துமூலமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்கள் மேற்படி விடயத்தை உறுதி செய்வதற்கான உதாரணமாகும்.

# 7. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

உள்ளூராட்சி மன்றங்களினால் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்வது பற்றிய ஏற்பாடுகள் தேசிய பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 2 ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் உறுப்புரைக்கு அமைய அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படுகின்ற பெறுகைக் குழு, அமைச்சின் பெறுகைக் குழு அல்லது திணைக்களத்திற்கு உரித்தான பெறுகைக் குழு ஆகிய சகல பெறுகைக் குழுக்கள் தொடர்பிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் காணப்படல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும் 2.8.5 பிரிவுக்கு அமைய பிரதேச பெறுகைக் குழுவில் அங்கத்துவம் வகிக்கின்ற ஆட்களுக்கு உரித்தான பணி தொடர்பில் தொழில்நுட்ப அறிவைக் கொண்ட ஒருவர் மற்றும் பெறுகை பற்றிய அறிவைக் கொண்ட ஒருவர் அங்கத்துவம் வகிப்பின் மற்றும் நிறுவனத் தலைவரினால் அது பற்றி திருப்தியுற முடியுமாயின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் உதவி அவசியமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமனம் செய்யும் அதிகாரம் கருத்திட்டத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவருக்கு உரித்தாகின்றது என்று மேற்படி வழிகாட்டல் தொகுப்பின் 2.8.4 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பு மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

அதற்கமைய உள்ளூராட்சி மன்ற பெறுகைச் செயன்முறையின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமனம் செய்வது அவசியமாகின்றது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபிப்பது தொடர்பில் 3 தகவுதிறன்களின் கீழ் ஆராயப்பட்டதுடன் இதன் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபிப்பது தொடர்பில் குழு அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போது கவனம் செலுத்தப்படுகின்ற விடயங்கள் பற்றிய அறிவு மற்றும் மேற்படி தகவுதிறன்களைத் தீர்மானிப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்ட மூலங்கள் போன்றன அதில் உள்ளடங்கும்.

கற்கையின் தகவல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களினால் பூரணமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமனம் செய்வது பற்றிய பதில்கள் உயர் பெறுமானத்தைக் கொண்டதாகும். அதற்கமைய 32 நிறுவனங்கள் ஒப்பீட்டு ரீதியான தகவல்களைப் பெற்றுத்தந்துள்ளன. அத்தகவல்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

- உள்ளூராட்சி மன்றங்களில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு வருடாந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபித்துள்ள நிறுவனங்கள்
- பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது அத் தேவைகளின் தன்மையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபித்துள்ள நிறுவனங்கள்
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபித்துள்ள போதும் அவை பற்றிய அடிப்படைத் தகவல்களைக் குறிப்பிடாது தகவல்களைச் சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள்

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபிப்பது தொடர்பில் பெரும்பாலான நிறுவனங்களினால் தேசிய பெறுகை வழிகாட்டல் தொகுப்பு மற்றும் வழிகாட்டல் கையேட்டின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளன.

## 7.1 குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்துகொள்ளல்

குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்துகொள்ளும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் பற்றி பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 2.8 அத்தியாயத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த பணி தொடர்பிலான அறிவைக் கொண்ட நிபுணர் ஒருவர் அல்லது நிபுணர்கள் மற்றும் பெறுகை முறையியல் தொடர்பிலான அறிவைக் கொண்ட ஒருவரை உள்ளடக்கியதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இருத்தல் வேண்டும். நிபுணத்துவ அறிவைக் கொண்ட ஒருவரின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருப்பின் வெளி நிறுவனமொன்றின் தகைமைவாய்ந்த ஒருவரை நியமனம் செய்துகொள்ளவும் ஆற்றல் உள்ளது.

கற்கையின் தகவல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்பக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பில் உள்ளூராட்சி மன்றத்தில் போதியளவு அறிவு காணப்படுகின்றமையும் உறுதியாகின்றது. எனினும் சில உள்ளூராட்சி மன்றங்களினால் குழு அங்கத்தவர்களை நியமனம் செய்யும் போது ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்க வேண்டிய நிபுணத்துவ அறிவு பற்றி தனித்தனியாக தகவல்கள் குறிப்பிடப்படவில்லை. பெறுகைக்கான உத்தேச பொருள் அல்லது சேவை தொடர்பில் தொழில்நுட்ப அறிவைக் கொண்ட ஒருவர் மற்றும் பெறுகை தொடர்பில் அறிவைக் கொண்ட ஒருவருக்கும் காணப்படுகின்ற நிபுணத்துவ அறிவு இருவகையாக இருப்பதனால் அவ்வாறான புரிந்துணர்வைக் கொண்ட தகவல்களை சமர்ப்பிப்பது பெறுகைக் குழுவின்

திறனை உறுதி செய்யக் காரணமாக அமைகின்றது. சில நிறுவனங்களினால் ஒரு தொழில்நுட்பக் குழு பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதை மதிப்பீடு செய்வதற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வாறான சந்தர்ப்பங்களில் சரியான தரமான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் சரியான புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ள முடியாது.

எவ்வாறாயினும், வழிகாட்டல் தொகுப்பைப் பின்பற்றுவது தொடர்பாக முறையான படிமுறைகள் காணப்படுகின்ற போதும் இது பற்றிய தகவல் இல்லாமை ஊழல் செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பதாக உறுதிசெய்யாத போதிலும் அது பற்றிய வெளிப்படைத்தன்மை குறைவாக உள்ளது என்று குறிப்பிட முடியும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தொடர்பில் வெளிப்படைத்தன்மை இல்லாமை ஊழல் இடம்பெறக்கூடிய அபாயகரமான நிலைமையை உணர்த்துகின்றது.

# 8. கணக்காய்வுச் செயன்முறை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் (1978) 154 (1) உறுப்புரைக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட சகல அரச நிறுவனங்களினதும் கணக்குகள் கண்காய்வு செய்யப்பட முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 154 (5) ஆம் உறுப்புரைக்கு அமைய பொது நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தமது பணி மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றும் போது சகல பதிவேடுகள், அறிக்கைகள், காலஎல்லைகளுக்கான அறிக்கைகள் மற்றும் வேறு ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு, களஞ்சியம் மற்றும் வேறு ஆதனங்களுக்குப் பிரவேசிப்பதற்கு, மேற்படி பணி மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதில், விடய விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2018 இன் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சுக்கள் மற்றும் மேற்படி அமைச்சுக்களின் கீழ் இயங்கிவருகின்ற திணைக்களமொன்றுக்கான கணக்கீட்டு அலுவலரினால் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு உகந்த கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டிய ஏனைய அமைப்புக்களுக்கும் அதன் நிருவாக சபையினால் கணக்காய்வாளர் ஒருவரை முறையாக நியமனம் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது .

மாநகர சபைகளுக்கு கணக்காய்வுக்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) 219 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கு அல்லது குழுவுக்கு உள்ளூராட்சி மன்றத்திற்கு உரித்தான கணக்குகளை தொடர்ச்சியாக கணக்காய்வு செய்ய முடியும். அதற்குத் தேவையான சகல புத்தகங்கள் மற்றும் ஆவணங்களையும் வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று 220 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர சபைகளுக்கு கணக்காய்வுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 பிரிவுக்கு அமைய அரை ஆண்டு அடிப்படையில் அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வுக்கு உட்படுவதாகவும் அதற்கு சகல வசதிகள் மற்றும் செலவினங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172 ஆம் பிரிவினால் உள்ளூராட்சி மன்றங்களின் கணக்காய்வு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கமைய மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை நிதி அதிகாரச் சட்டத்தின் 133 மற்றும் 134 ஆம் பிரிவுகளுக்கு அமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்ற அல்லது உப அலுவலகங்களைக் கொண்ட அரசின் பாரிய நிறுவனங்களினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றைப் பேணிவருவது அத்தியாவசியமாகின்றது. மேலும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கணக்கீட்டு அலுவலரினால் தத்துவமளிக்கப்பட்ட ஒரு அலுலவர் உள்ளகக் கணக்காய்வாளராக செயற்பட முடியும்.

அத்துடன் 2009 யூன் மாதம் 09 ஆம் திகதிய DMA/2009 (i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மூலமும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களைத் தாபிப்பது பற்றிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் பல்வேறு உள்ளூர் அதிகாரஅமைப்புக்களினால் அடிக்கடி சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 8.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளூராட்சி மன்றங்களின் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வது தொடர்பான கற்கை நடவடிக்கைகள் மூன்று பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், உள்ளகக் கணக்காய்வு அலுவலராக நியமனம் செய்யப்படுகின்றவரின் பெயர் மற்றும் பதவி, அவ்வாறான அலுவலர் ஒருவர் இல்லை எனின் அதற்கான காரணங்களும் மேற்படி அலுவலரின் கடமைப் பட்டியலும் இந்தக் கற்கையில் உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக 2017 முதல் 2019 வரையான கற்கைக் காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் சான்றுப்படுத்திய பிரதிகளைச் சமர்ப்பிப்பது பற்றியும் வினாக்கொத்தில் குறிப்பிடப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளுக்கு அமைய உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கா எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை பின்வருமாறு பொழிப்புரையாக்க முடியும்.

- உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவரை நியமனம் செய்தல்
- உள்ளக கணக்காய்வுக்கான அலுவலர்கள் சிலரை உள்ளடக்கிய அலகொன்றைத் தாபித்தல்
- உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அல்லது நிதிக் குழுவின் ஊடாக மேற்கொள்ளல்.

26. 2018 இன் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

- வேறு கடமைகளுக்காக நியமனம் செய்துள்ள அலுவலரின் ஒரு பணியாக கணக்காய்வைக் குறிப்பிடல்
- உள்ளகக் கணக்காய்வுக்கான ஒரு அலுவலர் அல்லது பிரிவை நியமனம் செய்யாமையும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையும்.

உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவரை நியமனம் செய்தல் அல்லது சில அலுவலர்களைக் கொண்ட பிரிவொன்றைத் தாபிப்பது தொடர்பாக 24 உள்ளூராட்சி மன்றங்கள் தகவல்களைச் சமர்ப்பித்துள்ளன. அவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் எந்த ஆண்டில் மேற்கொண்ட நியமனங்கள் என்பதை குறித்துரைக்கவில்லை. மேலும் மேற்படி நியமனங்கள் பற்றி ஆராயும் போது பெரும்பாலான அலுவலர்கள் கணக்காய்வு அலுவலர்களாக பூரணமான பொறுப்புக்களுடன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன் சில நிறுவனங்கள் கணக்காய்வை ஒரு கடமையாக பொறுப்பளித்திருப்பதானது கணக்காய்வு அலுவலரின் சுயாதீனமான கணக்காய்வுக்கு தடை ஏற்படுத்தும் வாய்ப்பை உருவாக்கும் என்று குறிப்பிட முடியும். மேலும் தெஹிஅத்தகன்டிய பிரதேச சபையினால் நிதிக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் உள்ளகக் கணக்காய்வு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

உள்ளகக் கணக்காய்வு அலுவலர்களை நியமனம் செய்வது தொடர்பில் மொனராகலை பிரதேச சபை சமர்ப்பித்துள்ள தகவல்களுக்கு அமைய உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்படவில்லை என்பதுடன் வேறு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அலுவலர் ஒருவருக்கு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனினும் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளாக இருப்பது இறுதிக் கணக்குகளைத் தயார் செய்வது மற்றும் வெளிக்கள நடவடிக்கைகளை அவதானிப்புச் செய்து விலைமதிப்பு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதாகும். இவ்வாறான கடமைகளில் பெறுகை முறையியல் அவதானிப்பு மற்றும் கணக்காய்வுக்குள்ள சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்படுகின்றன. எனினும் 2017 ஆம் ஆண்டுக்கு உள்ளகக் கணக்காய்வு ஊவா மாகாண சபையினூடாக மேற்கொள்ள செயற்பட்டுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும் என்பதுடன், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு அவ்வாறான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மெதகம பிரதேச சபையினால் உள்ளகக் கணக்காய்வுக்கான அலுவலர் ஒருவரை நியமனம் செய்வதற்கு பதவியணியில் அலுவலர்கள் போதியளவில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பருத்தித்துறை பிரதேச சபையினால் உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ள போதும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் உள்ளகக் கணக்காய்வு அலுவலர் அல்லது பிரிவினால் குறித்த உள்ளூராட்சி மன்றத்தின் உள்ளக கணக்காய்வு அலுவலர் அல்லது பிரிவினால் குறித்த உள்ளூராட்சி மன்றத்தின் உள்ளக நடவடிக்கைகள் தொடர்பில் மாதாந்த கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தொழில் விபரங்கள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. எனினும் இப்பணியை நிறைவேற்றுவது எந்தளவுக்கு வெற்றிகரமானது என்பதை ஆராய்வதற்கு போதியளவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. உதாரணமாக சில சந்தர்ப்பங்களில் உள்ளக கணக்காய்வானது ஒரு வருடமும் அலுவலரை நியமனம் செய்வது மற்றும் பணிகளைப் பொறுப்பளிப்பது வேறு ஆண்டிலும், அந்த ஆண்டின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையையும் குறிப்பிட முடியும். எவ்வாறாயினும் பொதுவாக உள்ளக் கணக்காய்வு அலவலர்கள் 24 உள்ளூராட்சி மன்றங்களில் நியமனம் செய்துள்ள போதும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை சமர்பித்திருப்பது 2017 ஆம் ஆண்டில் 13 நிறுவனங்களும், 2018 இல் 10 நிறுவனங்களும், 2019 இல் 1 நிறுவனமும் என்ற வகையிலுமாகும். இந்த அறிக்கைகளும் 12 மாதங்களுக்குமானதாக இருக்காத சந்தர்ப்பங்களும் அவதானிப்புச் செய்யப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளகக் கணக்காய்வு தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் பின்பற்றியுள்ள நடைமுறைகள் பிரதான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றியுள்ள போதிலும் குறிப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கைகளில்கூட பெறுகை முறையியல் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே ஊழல் செலவினம் பற்றிய தகவல்கள் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்துவதில்லை. இதற்கமைய பெறுகை செயன்முறையில் இடம்பெறக்கூடிய தவறுகள் முதல் ஊழல் குற்றச்செயல்கள் வரையான தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டது என்பது தெரியவருகின்றது.

## 8.2 வெளிவாரிக் கணக்காய்வு

வெளித் தரப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வாக தேசிய கணக்காய்வுத் திணைக்களத்தினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகம் கருதப்படுவதுடன், உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றினால் ஒரு வருடத்திற்கேனும் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டு தொடர்பாக 19 நிறுவனங்களும் 2018 ஆம் ஆண்டு தொடர்பாக 14 நிறுவனங்களும் கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்ததுடன், கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிப்பது தொடர்பில் நிகவெரட்டிய பிரதேச சபை குறிப்பிட்டிருப்பது இது இரகசியத்தன்மைவாய்ந்த ஆவணமொன்றாக இருப்பதனால் சமர்ப்பிக்க

முடியாது என்றாகும். (தகவல் அறியும் சடடத்திற்கு அமைய கணக்காய்வு அறிக்கை உணர்வுப்பூர்வமான தகவலொன்றாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.) மேலும் மத்திய நுவரகம்பலாத பிரதேச சபையினால் வெளிக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வு திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மொனராகலை பிரதேச சபையினால் கணக்காய்வு வினாக்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் அல்லது அலுவகத்தினால் அமுல்படுத்தியுள்ள அறிக்கைகளை ஆராயும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- பெறுகை செயன்முறைகள் தொடர்பில் விரிவான கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை
- பெறுகைத் திட்டம் அமுல்படுத்தப்படாமை தொடர்பில் அவதானிப்புச் செய்யப்பட்டமை மற்றும் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை
- கணக்காய்வுக் குழுக்களைத் தாபிப்பது பற்றிய வினாக்கள்
- ஒப்பந்தங்கள் தொடர்பிலான தாமதக் கட்டணங்களை அறவிடாமை
- கணக்காய்வுக்குப் போதியளவு தகவல்கள் மற்றும் ஆவணங்கள் இல்லாமை
- பெறுகை பணி தொடர்பில் மதிப்பீட்டுத் தொகை, ஆகக்குறைந்த விலைகளின் கீழ் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட விலை மற்றும் உண்மையான விலை தொடர்பில் காணப்படுகின்ற வித்தியாசங்கள் பற்றிய வினாக்கள்
- பெறுகை அல்லது தொழில்நுட்பக் குழுக்களை நியமனம் செய்யாது பெறுகையை மேற்கொள்ளல்
- விலைமனுக் கோரல் மற்றும் திறந்த ஏலம் தொடர்பில் சரியான ஆவணங்கள் வெளிப்படைத்தன்மையுடன் பேணிவரப்படாமை மற்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமை
- பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சமுதாயத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையில் சமுதாய சங்கங்களுக்கு ஒப்பந்தம் கையளிப்பதில் முறைகேடுகள் காணப்படல்
- அறிவித்தல் வெளியிடும் போது மற்றும் வகைப்படுத்தல்களைத் தயார் செய்யும் போது காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக நிதிசார் நட்டம் ஏற்படல்.

இந்த சந்தர்ப்பங்கள் ஊழல் அபாயம் காணப்படுகின்ற நிலைமைகளாகும். இங்கு பெரும்பாலான சந்தர்ப்பங்கள் இந்த அறிக்கைக்கு அடிப்படையாக அமைந்த தகவல்களின் மூலம் தெளிவாகின்றன.

# 9. தகவல் அறியும் சட்டத்திற்கு அமைய தகவல்களை சமர்ப்பிக்கின்ற போக்கு

## 9.1 சவால்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொது நிறுவனங்களினால் மக்களின் பணத்தைப் பயன்பத்தி மக்களின் நலன்புரிக்காக அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செலவிடுவது தொடர்பிலான தகவல்களை ஆராய்வதற்குள்ள உரிமை 2016 இன் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்தக் கற்கைக்கு மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையில் பயன்படுத்தப்பட்டதுடன், உள்ளூராட்சி மன்றங்களின் தகவல் அலுவலர்களிடமிருந்து பெறுகை முறையியலுக்கு உரித்தான தகவல்கள் பற்றி வினவப்பட்டது. அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்கள் இந்த சட்டத்திற்கு பதிலளிப்பதற்கு உள்ளக முறையியல்கள் எந்தளவு தூரத்திற்கு பலம் மிக்கதாக்கப்பட்டுள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டது. தகவல் அறியும் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 23.1(அ) பிரிவுக்கு அமைய ஒவ்வொரு பொது நிறுவனமும் சட்டம் அமுலுக்குவரும் திகதி முதல் மூன்று காலப்பகுதிக்குள் தகவல் அலுவலர் ஒருவர் அல்லது ஒருசிலரை நியமனம் செய்தல் வேண்டும். குறித்த அலுவலரின் பொறுப்பாக 24இ 25 மற்றும் 26 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு துரிதமாக தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் விண்ணப்பதாரிக்கு உச்சளவாக நியாயத்தை நிலைநாட்டும் வகையில் தகவல்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

29 நிறுவனங்கள் தகவல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்து அல்லது அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும் தேவையான தகவல்கள் உரிய காலப்பகுதிக்குள் வழங்கப்படாமை சவாலாக இருந்ததுடன், கற்கைக்கு உட்படுத்தப்பட்ட 75 உள்ளூராட்சி மன்றங்களில் 35 நிறுவனங்கள் மாத்திரம் தகவல்களை ஓரளவுக்கு பெற்றுக் கொடுத்துள்ளதன் காரணமாக கற்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் போதியளவானதாக இருக்காமை கற்கைக்கு சவாலாக இருந்தது.

மேலும் கற்கையின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் உரிய தரநியமத்தின் கீழ் வழங்கப்படாமை குறிப்பாக எழுத்து மூலமான சான்றுகளை சமர்ப்பிக்கும் போது சான்றுப்படுத்திய பிரதிகள் கோரப்பட்ட போதிலும் ஒரு சில மன்றங்கள் சான்றுப்படுத்தாத பிரதிகளை வழங்கியமை காரணமாக கற்கைக்குப் பயன்படுத்திய தரவுகள் பற்றிய நம்பகத்தன்மையை உறுதி செய்துகொள்வது தொடர்பிலும் சவால்கள் எழுந்தன.

மேலும் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றதாக உள்ளமையும் சவாலாக இருந்தது. உதாரணமாக ஒரு ஆண்டின் அறிவித்தலும் மற்றொரு ஆண்டின் கேள்விக் குழுவின் தீர்மானமும் அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்வது பற்றிய தகவல்களை சமர்ப்பித்தமை காரணமாக அதனை சரியாக ஒரேவிதமாக பகுப்பாய்வு செய்வது கடினமானதாகவும் சவால் மிக்கதாகவும் இருந்தமை.

பெறுகை முறையியலில் பின்பற்றப்பட் பொதுவான முறையியல்கள் பற்றி நிறுவனங்கள் தகவல்களை சமர்ப்பித்துள்ள போதிலும் உள்ளகத் தீர்மானங்கள் மற்றும் விதிவிலக்குகள் தொடர்பில் நம்பகத்தன்மை மற்றும் போதியளவில் தகவல்களை சமர்ப்பிக்காமை தரவுப் பகுப்பாய்வின் போது சவாலாக இருந்தது.

## 9.2 தகவல் அறியும் சட்டம் தொடர்பில் பதிலளித்தல்

தகவல் அறியும் சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு பொது நிறுவனத்தினாலும் பொது மக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பொது மக்கள் தகவல்களுக்குப் பிரவேசிப்பதற்குள்ள ஆற்றலும் வலுவூட்டப்பட்டது. இந்த சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தகவல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்படி சட்டத்திற்கு பதிலள் நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது. இது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் அமைந்தது.

- இந்தக் கற்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் 75 ஆக இருப்பினும் பதிலளித்திருப்பது 35 மன்றங்கள் மாத்திரமாகும். இது விகிதமாக 46மூ ஆகும் என்பதுடன் இது போதிளயவிலான தரவுகள் தொடர்பில் குறைவான பெறுமதியாகும்.

- தகவல்களை வழங்கிய துறைகள் பற்றி வினவும் போது நிறுவனங்களினால் அடிப்படையான மற்றும் பொதுவான முறையியல்கள் பற்றிய தகவல்கள் சமா்ப்பிக்கப்பட்ட போதும் உள்ளகத் தீா்மானம் தொடா்பான மற்றும் விதிவிலக்குகள் பற்றிய தகவல்களை சமா்ப்பிப்பது மிகவும் குறைந்த போக்கை வெளிப்படுத்தியது.
- ஒருசில உள்ளூராட்சி மன்றங்களின் பதில்கள் உரிய காலப்பகுதிக்குள் சமா்ப்பிக்கப்படாமை மற்றும் அதற்கு மேலதிக கால அவகாசம் அவசியமாயின் அது பற்றிக் குறிப்பிடாமை.
- பூரணமாக தகவல்களைப் பெற்றுத்தராமை உதாரணமாக சான்றுப்படுத்திய பிரதிகளைச் சமா்ப்பிக்காமை
- தரமான மற்றும் போதியளவிலான தகவல்களைப் பெற்றுத் தருவது தொடா்பில் உள்ளூராட்சி மன்றங்கள் கூடுதல் ஊக்கத்தை வெளிப்படுத்தாமை.

# 10. ஆராய்ச்சிக் கற்கையின் கற்றல்கள்

உள்ளூராட்சி மன்றங்களினால் தமது பெறுகை முறையியல் பற்றி வழங்கப்பட்ட தகவல்களை ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்தக் கற்கையின் மூலம் பின்வரும் கற்றல்கள் இனங்காணப்பட்டன.

நிறுவன பெறுகை முறையியல் ஓரளவுக்கு சிக்கலான முறையியலாகும் என்பதுடன் அதற்காகப் பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை படிமுறைகள் மற்றும் விதிவிலக்குகளும் காணப்படுகின்றன. எனவே இந்தக் கற்கைக்குரிய கேள்விக்கொத்துக்கு மேலதிகமாக வேறு ஆராய்ச்சி முறையொன்றைப் பின்பற்ற வேண்டியதன் தேவைப்பாடு இனங்காணப்பட்டது. இதன் போது ஒருசில தகவல்கள் தொடர்பில் உண்மையான மற்றும் சரியான தகவல்களை பிரவேசிப்பதற்கு உகந்த முறையியலைப் பயன்படுத்துவது முக்கியமான அம்சமாகும்.

# 11. முடிவுகள் மற்றும் சிபாரிசுகள்

கற்கைத் தகவல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது மிகவும் காத்திரமான முறையியல்களை பின்பற்றியுள்ளதாக தீர்மானிக்க முடியாதாயினும் அடிப்படை பணிகளான வழங்குநர்களைப் பதிவு செய்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களைத் தாபித்தல், கணக்காய்வு நடவடிக்கைகள் போன்ற விடயங்களை மேற்கொள்கின்றன என்பதை தீர்மானிக்க முடியும். எனினும் இந்த செயன்முறைகளை நடைமுறையில் அமுல்படுத்துவது தொடர்பாக சமர்ப்பித்துள்ள தகவல்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாகும். எனவே, ஒட்டுமொத்த கற்கையானது, நிறுவனங்கள் அனைத்தும் வழிகாட்டல்களை பின்பற்றி பெறுகை செயன்முறையை மேற்கொள்வதாக குறிப்பாகக் குறிப்பிட முடியாது எனினும் பெரும்பாலான நிறுவனங்கள் வழிகாட்டல்கள் பற்றிய அறிவைக் கொண்டுள்ளன என்பதைக் குறிப்பிட முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல தகவல்களையும் சமர்ப்பிக்காமை காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் ஊழல் செலவினம் பற்றி ஆராய முடியாது எனினும் ஊழல் அபாய நிலைமைகள் காணப்படுவதை வலியுறுத்த முடியும். வழங்குநர்களைப் பதிவு செய்தல் பற்றிய சகல தவல்களையும் சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் தவிர ஏனைய நிறுவனங்கள் தொடர்பில் குறித்ததொரு முறையியலின் கீழ் வழங்குநர்கள் பதிவு செய்யப்படவில்லையா என்பதை உறுதி செய்துகொள்ள முடியாத போதிலும் அந்நிறுவனங்கள் தகவல் அறியும் சட்டத்திற்கு பதிலளிப்பது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் கவனம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுவதைக் குறிப்பிட முடியும். இதற்கு ஆரம்ப கட்டத்தின் போது 75 மன்றங்களில் 35 மன்றங்கள் மாத்திரம் பதிலளித்துள்ளமை ஒரு உதாரணமாகும். மேலும் தகவல்களைச் சமர்ப்பித்துள்ள நிறுவனங்கள் கூட மிகவும் தரமான சரியான தகவல்களைச் சமர்ப்பித்துள்ளமை தொடர்பில் காத்திரமான நிலைமை காணப்படுவதும் அவதானிப்புச் செய்யப்படவில்லை. மேலும் சில நிறுவனங்கள் தகவல்களைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு தொடர்பில் மிகவும் குறைவான அர்ப்பணிப்பையே கொண்டள்ளது என்பதையும் குறிப்பிட முடியும். ஆகக் குறைந்த தகவல்களைச் சமர்ப்பித்து பதிலளித்தல் எனும் விடயத்தை மாத்திரம் பூர்த்தி செய்வதற்கு முயற்சித்துள்ள நிறுவனங்களும் உள்ளன. எவ்வாறாயினும் வேறு தகவல் அறிவது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான அர்ப்பணிப்பு / வகைப்பொறுப்புக்கூறல் தொடர்பில் தொடர்ந்தும் ஆராய்வது முக்கியமானதாகும். அத்துடன் மன்றங்களின் தகவல் அலுவலர் முறையாக அதிகாரமளிக்கப்படவில்லை என்பதையும் தீர்மானிக்க முடியும். நிறுவன ரீதியாக தகவல்களைப் பேணிவருவது சில பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. அப்பிரிவுகளின் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் போது தகவல் அலுவலரின் அதிகாரம் முக்கிய காரணியாகும். மேற்படி அலவலரின் கோரிக்கைக்கு பதிலளிக்குமளவுக்கு தத்துவ அதிகாரம் மேற்படி அலுவலருக்கு உரித்தானதாக இருப்பது முக்கியமான அம்சமாகும்.

தகவல் அறியும் சட்டம் மற்றும் அதன் வகைப்பொறுப்புக்கூறல் தொடர்பாக நிறுவன ரீதியாக சகல அலுவலர்களுக்கும் கட்டுப்பட்டுள்ளார்கள் என்றும் நிறுவன ரீதியான கடப்பாடுகள் பற்றி அலுவலர்கள் போதியளவில் விழிப்புணர்வூட்டப்பட்டிருப்பதும் முக்கியமானதாகும். மேலும் தகவல் சட்டத்திற்கு அமைய ஒவ்வொரு நிறுவனமும் 10 வருடங்களுக்குள் கோரியுள்ள தகவல்களைப் பெற்றுக் கொடுக்க கட்டுப்பட்டுள்ளன. எனினும் இந்த நிறுவனங்களினால் தகவல்களை சமர்ப்பிக்காமை சில கணக்காய்வு வினாக்களின் போதும் தகவல்களைப் பெற்றுக் கொடுக்காமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதனாலும் தகவல்களைப் பேணிவருவது தொடர்பில் நிறுவனத்திற்கு உரித்தான சிக்கல்கள் காணப்படுவதாக உறுதி செய்துகொள்ள முடியும்.

## சிபாரிசுகள்

இவ் ஆய்வுக் கற்கையின் தகவல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களில் ஊழல் அபாய நிலைமையைக் குறைத்துக் கொள்வது தொடர்பில் பின்வரும் சிபாரிசுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

- உள்ளூராட்சி மன்றங்களின் பெறுகை முறையியல் தொடர்பில் நெருக்கமான கண்காணிப்பை மேற்கொள்ளல்.
- பெறுகை முறையியல் மற்றும் தனிநபர் மற்றும் நிறுவனம்சார் வகைப்பொறுப்புகூறல் தொடர்பில் அலுவலர்களின் திறன் அபிவிருத்தியை மேன்மேலும் வளர்த்தல்
- பெறுகை முறையியலின் பிரதான செயன்முறைகளைப் பின்பற்றுவதுடன் ஒப்பிடுகையில் விதிவிலக்குகளைப் பயன்படுத்துவதன் காரணமாக பெறுகைக் கோட்பாடுகள் வீழ்ச்சியடைவதைத் தவிர்ப்பது தொடர்பில் முறையான பொதுவான பலம்மிக்க சட்டங்கள் மற்றும் விதிகளை அறிமுகம் செய்தல்
- ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் பெறுகை திட்டத்தை அமுல்படுத்த வேண்டியதாய் இருத்தல் மற்றும் அதன் மூலம் செயன்முறையில்

செலவாகும் செலவினத்தைக் குறைத்துக் கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி உரிய உபாயமுறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் கண்காணிப்பு

- பெறுகை தொடர்பில் நிறுவன ரீதியாகவும் அலுவலர்கள் தொடர்பிலுமான செயலாற்றுகை நியமங்களை அறிமுகம் செய்தல்
- பெறுகை முறையியலை மென்மேலும் வினைத்திறனும், விளைதிறனும்மிக்கதாக அமுல்படுத்துவதற்குத் தேவையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல்
- பெறுகை முறையியலின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கு இலத்திரனியல் முறைமையை (ந-பழளநசயெஉந ளலளவநஅ) அறிமுகம் செய்வதும், அமுல்படுத்துவதும்.
- உள்ளூராட்சி மன்றங்களில் பெயரிடப்பட்ட தகவல் அலுவலரின் செயற்பணியை முறையாக வலியுறுத்தி தத்துவமுள்ளதாக்குவது தொடர்பாக தேசிய மட்டத்தில் உபாயமுறைகளை அறிமுகம் செய்தல்
- தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்தி பொது மக்கள் தகவல்களுக்குப் பிரவேசிப்பதற்குள்ள வாய்ப்புக்களை உறுதி செய்வதற்காக அரச நிறுவனக் கட்டமைப்பில் மற்றும் மக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்தி பொது மக்கள் தகவல்களுக்குப் பிரவேசிப்பதற்குள்ள வாய்ப்புகளை உறுதி செய்வதற்காக அரச நிறுவனக் கட்டமைப்பில் மற்றும் மக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டுள்ள சாதகமான வெளிப்படுத்தல்களின் மூலம் பெறுகை செயன்முறையில் இடம்பெறுகின்ற முறை பற்றிய விபரங்களை வெளிப்படுத்தல் - இதனைச் செய்வதற்கு நிறுவனம்சார் இணையத்தளத்தை பயன்படுத்த முடியும்.

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா**
**5/1 எலி பேங்க்**
**வீதிஇ கொழும்புஇ**
**இலங்கை.**

தொலைபேசி இல : +94 0114369781
தொலைநகல் : +94 011 2 501 707

tisl@tisrilanka.org
www.tisrilanka.org

facebook.com/tisrilanka
twitter.com/tisrilanka

ISBN 978-955-1281-94-6